விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 20 வியாழக்கிழமை (04.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள், உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# '13' ஐ பாதுகாக்க

# கையெழுத்து வேட்டை

## எதிர்க் கட்சிகள் கூட்டாக முன்னெடுப்பு



(கொழும்பு)

13ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பதோடு அதனை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுத்தல் மற்றும் அதிகாரத்தைப் பகிர்ந்து ஒன்றிணைவோம் என்னும் தொனிப் பொருளின் அடிப்படையில் எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பு இயக்கங்கள் ஒன்றிணைந்து நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் கையெழுத்து வேட்டையை நடத்தின. (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானியாவும் பயண எச்சரிக்கை

(லண்டன்)

இலங்கைக்குப் பயணம் செய்யும் தமது நாட்டவர்களுக்கு பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாகச் செல்வோர் வன்முறைகள் மற்றும் ஆட்கடத்தல்களுக்குப் பொறுப்பான ஆயுதக்குழுக்கள் அங்கு செயற்படுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் சிறுவர்கள் உள்ளிட்டவர்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கும் (19ஆம் பக்கம் பார்க்க)

## முதன்மை வேட்பாளர் யார்?

## கூட்டமைப்பு இன்று கூடுகிறது

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் விசேட கூட்டம் கொழும்பில் இன்று பிற்பகல் 5.00 மணிக்கு இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் சுரேஸ் க.பிறேமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளுக்கிடையில் ஏற்கெனவே இணக்கம் காணப்பட்ட ஐந்து கட்சிகளையும் உள்ளடக்கிய அரசியல உயர்பீடம் ஒன்றை நிறுவுதல், அதன் கீழான தலைமைக்குழு, நிதிக்குழு, தேர்தல் குழு, அரசியல் விவகாரங்களுக்கான குழு உள்ளிட்ட நிர்வாக பொறிமுறையை ஏற்படுத்தி, இறுதி முடிவை வரையறை செய்து தமிழத் தேசியக் கூட்டமைப்பை ஜனநாயக ரீதியான ஒரு சக்திமிக்க ஸ்தாபனமாக மாற்றி அமைப்பது தொடர்பிலும், வட மாகாண சபை தேர்தலில் யாரை முதன்மை வேட்பாளராக நியமிப்பது மற்றும் வட மாகாண சபை தேர்தலை வெற்றி கொள்வதற்கான உபாயங்களை வகுப்பது உள்ளிட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரங்கள் குறைக்கப்படும்!

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட மாட்டாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்தியாவிற்கு அறிவிப்பார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

13-ம் திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதனைப் போன்று காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது எனவும் ஏனைய அனைத்து அதிகாரங்களும் வட மாகாணசபைக்கு வழங்கப்படும் எனவும் பசில் ராஜபக்ஷ இந்திய மத்திய அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்த உள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## புதிய இந்தியத் தூதுவர் கோத்தாவுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் ஜஸ்வர்த்தன் குமார் சின்ஹா, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம் பெற்ற இச்சந்திப்பில், இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜஸ்வர்த்தன் குமார் சின்ஹா, தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் நோக்குடனேயே கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது.

அதேவேளை, 13-வது திருத்தச் சட்டமூலத்தை இரத்துச் செய்ய வேண்டும் என தெரிவித்து வரும் கோத்தபாய ராஜபக்ஷவுடன், அது தொடர்பிலான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து ஜஸ்வர்த்தன் குமார் சின்ஹா எதுவும் பேசினாரா என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை.


அத்துடன் இந்திய தேசிய பாதுகாப்பு (02ஆம் பக்கம் பார்க்க)



புதிதாக நியமனம் பெற்றுள்ள இந்தியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கான உயர் ஸ்தானிகர்கள் நேற்று புதன்கிழமை தங்களது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர். ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே இந்திய உயர் ஸ்தானிகர் வை.கே.சிங் மற்றும் கனேடிய உயர் ஸ்தானிகர் சேலி வைடிங்க் ஆகியோர் இந்த நியமனக் கடிதங்களைக் கையளித்துள்ளனர்.

## தேர்தல் ஆயுதமாக '13' தூக்கிப் பிடிப்பு

### அமைச்சர் சேகுதாவூத் தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

நாட்டில் ஆயுதங்கள் ஒழிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் 13 எனும் ஆயுதத்தை அனைவரும் கையிலெடுத்துள்ளனர் என உற்பத்தி திறன் விருத்தி அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளருமான பசீர் ஷேகுதாவூத் தெரிவித்தார்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு அதிகாரம் அதிகரித்தால் நாட்டிற்கு பெரும் பிரச்சினை

### அரசை எச்சரிக்கிறார் அமைச்சர் விமல்

(கொழும்பு)

நாட்டில் ஏனைய மாகாணங்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் மாத்திரமே வடக்கு மாகாணத்திற்கும் வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனைய மாகாணங்களில் பயன்படுத்தப்படாத அதிகாரங்களை வடக்கு மாகாணத்திற்கு வழங்கினால், அது நாட்டின் பெரும பிரச்சினைகளை தோற்றுவிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் இருக்கும் சரியான நிலைப்பாட்டில் இருந்து, தவறான நிலைப்பாட்டுக்கு கொண்டு செல்ல, அரசாங்கத்தில் உள்ள சிலர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

எனினும் ஜனாதிபதி மிகத் தெளிவாக நாட்டுக்காக எடுக்க வேண்டிய முடிவுகளை எடுத்து, பெறப்பட்ட வெற்றியை பின்நோக்கி செல்ல இடமளிக்காது, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வட மாகாண சபை தேர்தலில் கே.பி, தயா மாஸ்டர், தமிழினி ஆளுந்தரப்பு வேட்பாளர்களாக போட்டி!

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களான கே.பி எனப்படும் செல்வராசா பத்மநாதன், தயா மாஸ்டர் மற்றும் தமிழினி ஆகியோர் ஆளுந்தரப்பு வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வட மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடுவதற்கு இம்மூவரும் விண்ணப்பித்துள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் மைத்திரி பால சிறிசேன உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக்குழுவினால் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்ட பின்னரே இவர்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இவர்கள் மீது நீதிமன்றங்களில் எவ்வித குற்றங்களும் நிரூபிக்கப்படாத நிலையில் இம்மூவருக்கும் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்ற வகையில் அவர்களின் விண்ணப்பங்களை நிராகரிக்க முடியாது என்றும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கடந்த வாரம் விடுதலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமைப் பெறவுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகவே அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை பெறுவுள்ளதாக குறிப்பிட்டுள்ள இவ்வூடகம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதற்கு அனுமதி வழங்குவார் என்றும் தெரிவித்துள்ளது.

வட மாகாண சபைத் தேர்தலில் இம் மூவரும் போட்டியிடவுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்த போதிலும் இது தொடர்பில் கே.பியும்,தமிழினியும் எவ்வித கருத்துக்களையும் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மன்னாரில் வீதிகள் திறப்பு

(மன்னார்)

மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு வேலைத்திட்டங்களின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அமுலாக்கத்தில் வட மாகாண வீதி இணைப்புத் திட்டத்தின் ஊடாக புனரமைக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தின் சில வீதிகள் மக்கள் பாவனைக்காக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

இவ் வீதி திறப்பு நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாறூக், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம் அதாவுல்லா ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (செ)

# மனைவியை தாக்கிய குடும்பஸ்தருக்கு கடும் நிபந்தனையுடன் பிணை அனுமதி

(கரவெட்டி)

குடும்ப வன்முறையில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவரை கடும் நிபந்தனையுடன் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் குறித்த குடும்பஸ்தர் தனது மனைவியை அடித்து காயப்படுத்தி துன்புறுத்தி வந்ததாக மனைவியினால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த குடும்பஸ்தர் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்றைய தினம் மீண்டும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் குறித்த குடும்பஸ்தர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த குடும்பஸ்தரை மனைவி வசிக்கும் வீட்டிற்கோ அல்லது கிராமத்திற்கோ ஒருவருடத்திற்கு பிரவேசிக்க கூடாதெனவும் மூன்று பிள்ளைகளுக்கும் மாதாந்தம் 9ஆயிரம் ரூபா தாபரிப்பு பணம் செலுத்த வேண்டுமெனவும் உளநல மருத்துவ ஆலோசனை பெறவேண்டும் எனவும் கடும்நிபந்தனை விதித்தார்.

அத்துடன் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிக்குள் கையொப்பமிடவேண்டும் எனவும் குறித்த குடும்பஸ்தரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் கார்த்திகை மாதம் 6-ம் திகதிக்கு இவ்வழக்கை ஒத்திவைத்தார். (ம-24)


**பாலா** சினிமா சாவகச்சேரி

06.07.2013 முதல்

காட்சிகள் 10.30 2.30 6.30



(C-3867)


# பாதுகாப்பு பிரச்சினை தமிழர்களுக்கு கிடையாது -சம்பிக்க ரணவக்க

தமிழர்களுக்கு எவ்வித பாதுகாப்புப் பிரச்சினைகளும் கிடையாது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இங்கு அவர்மேலும் தெரிவிக்கையில்

மாகாண சபைகளுக்கு காவல்துறை அதிகாரங்களை வழங்க வேண்டிய எவ்வித அவசியமும் கிடையாது

இலங்கைத் தமிழ்த் சனத்தொகையில் 60 வீதமானவர்கள் தெற்கிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

வடக்கிற்கு காவல்துறை அதிகாரங்களை வழங்குவதன் மூலம் வெள்ளவத்தையில் வாழ்ந்து வரும் தமிழர்களுக்கு நன்மைகள் ஏற்படப்போவதில்லை

வெள்ளவத்தை வாழ் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு பாதுகாப்பு பிரச்சினை என்பது கிடையாது

காவல்துறை அதிகாரங்கள் மாகாண சபையில் நீக்கப்பட வேண்டியது அவசியமானது

மேலும் வரலாற்றில் இழைத்த தவறுகளை திருத்திக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சிறந்த சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என சம்பிக்க ரணவக்க தெரி வித்துள்ளார். (செ-11)

# வாகன விபத்தில் வயோதிபர் காயம்

(கரவெட்டி)

அல்வாய் நாவலடி பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது, நேற்றுக்காலை 9மணியளவில் நாவலடி பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதிலேயே இவ்விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அல்வாய் வடக்கை சேர்ந்த முருகேசு இராஜகாந்தன்(வயது 64)என்ற வயோதிபரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (ம-24)

# புதிய இந்திய...

ஆலோசகர் சிவ்சங்கர் மேனன அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மேனன் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து 13-வது திருத்தச் சட்டமூல விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவார் என செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (செ-11)


# மரண அறிவித்தல்



கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி
**செல்வம் பார்வதி**

அவர்கள் 03.07.2013 புதன்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அமரர் கந்தன் செல்வம் அவர்களின் அன்பு மனைவியும், பேரின்பநாதன், நிர்மலநாதன், தர்மராஜா, நேசநாதன் தயாபரன், சந்திரவதனா, சாரதா, அருண்மாறன், மதிமாறன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீஜெயா, றோகினி, சசிகலா, லிங்கசறோயினி, வசந்தராணி, சத்தியநேசன், ஸ்ரீபரன், சங்கீதா, தர்சிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கபில், குஜால், நிலக்ஷனா, நிக்சயன், லக்ஷிகா, ஜென்சிகா, ஸ்ரீராம், நிதர்சன், நிரோஜன், தனேஸ், பிரவீன், திஷான், கஜானா, கோபிகன், கோபிராஜ், சபீனா, அபிஷன், சதுர்த்திகா, அபிசேக் அகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 04.07.2013 இன்று வியாழக்கிழமை நடைபெற்று காலை 11 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கொட்டைக்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(C-3866) தகவல் : பிள்ளைகள்

**மாபெரும் ஆடித் தள்ளுபடி**

இன்று தொடக்கம் வீட்டுக்குத் தேவையான அனைத்து தளபாடப் பொருட்களையும் ஒரே இடத்தில் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.



0778314201
0773583879

(C-3865)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3843)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு**
தொ.பே. : 021 321 0815.021 567 1540
E-mail : valampurii@yahoo.com, valampurijaffna@gmail.com

**பிள்ளையார் இன்**

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-3844)

**வீடு விற்பனைக்கு**

கொழும்புத்துறை வீதி சுண்டுக்குளியில் 2 பரப்பு 0.27 குளியும் கொண்ட 4 அறைகள் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (தரகர்கள் தேவையில்லை)

தொடர்புகளுக்கு: 0779791957

(சி-03864)

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்




காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30

இலங்கை இந்திய ஒரே தின வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நல்ல நீதிபதி

ஓர் ஊரில் நீதிபதி ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஹம்மாஸ். அவர் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர்.

தான் பார்க்கும் பதவிக்காக அவர் அரசாங்கத்திடம் இருந்து ஊதியமே வாங்கிக் கொள்ளவில்லை.

"எனக்கு ஊதியம் வேண்டாம் என்று அவர் கூறி விட்டார். அவர் தன் குடும்பச் செலவுக்கு என்ன செய்தார்?"

இரவு நேரங்களில் புத்தகங்கள் எழுதுவார். அதை விற்று அதில் இருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தை நடத்தினார்.

வீட்டு வேலைகள் அனைத்தையும் வீட்டில் இருப்பவர்களே கவனித்துக் கொண்டார்கள்.

அவர் மக்கள் எந்நேரத்தில் வந்தாலும் விசாரித்து தீர்ப்பு வழங்குவார்; மக்களுக்கு அவர் மீது அதிக மரியாதை இருந்தது.

அவருக்கு அந்த மாநிலத்தின் முதலமைச்சர் பண முடிச்சொன்றை வழங்க முன்வந்தார். ஆனால், அதை வாங்க அவர் மறுத்து விட்டார்.

"நீதித்துறையில் நீங்கள் பல முக்கியமான பொறுப்புகளை வகிக்கிறீர்கள். அதனால் அவை இரவு நேரத்தில் நீங்கள் நூல்கள் எழுதுவதற்குத் தடையாக இருக்கின்றன. எனவே, அரசாங்க நிதியிலிருந்து ஒரு சிறு தொகையையாவது சம்பளமாக வாங்கிக் கொள்ளுங்கள்" என்று முதல்வர் கூறினார்.

ஆனால், அதற்கு நீதிபதி மசியாமல் "நான் மக்களுக்குப் பணியாற்றுபவன். மக்கள் தொண்டுக்கு ஊதியமாக நான் எதையும் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை" என்று உறுதியாகச் சொல்லி விட்டார்.

"சரி... இதற்கும் மேலே இவரை வற்புறுத்தினால், இப் பதவியிலிருந்து விலகினாலும் விலகிக் கொள்வார். ஒரு நல்ல நீதிபதியை நாம் இழந்து விடக்கூடாது" என்று நினைத்து முதல்வர் பேசாமல் இருந்து விட்டார்.

அந்த ஊரில் ஒருவர் ஆடு, மாடுகள் வைத்திருந்தார். அவைகளை புல்வெளியில் மேயவிட்டு, அமர்ந்திருப்பதற்கு தனது நண்பன் ஒருவனுடைய வீட்டை அண்டி ஒரு குடிசை போட்டுக் கொள்ளலாம் என்று இவர் ஏற்பாடு செய்தார்.

ஆனால், அதற்கு நண்பன் ஒப்புக் கொள்ளவில்லை. "இது நடைபாதை... இதில் குடிசை கட்ட முடியாது" என்று அவன் தடுத்தான்.

அதனால் இருவருக்கும் இடையில் தகராறு மூண்டது. "சரி... இதற்கும் மேலேயும் நமக்குள் வம்பு வேண்டாம்; பேசாமல் நீதிபதியிடம் சென்று முறையிடுவோம்" என்று இருவரும் முடிவு செய்தார்கள்.

இருவரும் நீதிபதியைத் தேடிச் சென்றார்கள். நீதிபதி யார் என்று அவர்களுக்குத் தெரியாது. நீதிமன்றத்தை நோக்கி நடந்த வேளையில் எதிரில் ஒருவர் தண்ணீர் குடத்துடன் வந்து கொண்டிருந்தார்.

அவரிம் இவர்கள் இருவரும் "இந்த ஊர் நீதிபதியைப் பார்க்க வேண்டும். இப்போது அவர் எங்கே இருப்பார்" என்று வினவினார்கள்.

"நான்தான் நீதிபதி... உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள்" என்றார்.

"எங்கள் பிரச்சினையைச் சொல்கிறோம். ஆனால், நீங்களே தண்ணீர் குடமும் கையுமாக இருக்கிறீர்கள். அதை சற்று கீழே இறக்கி வையுங்கள். அதன் பின் நிதானமாக நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்" என்று இருவரும் கூறினார்கள்.

அதற்கு அந்த நீதிபதி; "இது மக்கள் நடந்து போகும் நடைபாதை. அதனால் நான் வைத்திருக்கும் குடத்தை இங்கே இறக்கி வைத்து... இந்த வழியாகப் போகும் போது மக்களுக்கு இடைஞ்சல் கொடுக்க விரும்பவில்லை. ஆதலால் இக்குடம் என்னிடமே இருக்கட்டும். நீங்கள் பிரச்சினையைச் சொல்லுங்கள்" என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் இவர்கள் இருவரும், "சரி ஐயா... நாங்கள் போய் வருகிறோம்" என்று கூறிய படியே புறப்பட்டார்கள்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சமுத்திரமீன் பண்ணையை அறிமுகம் செய்ய ஓசியன் பிக் நிறுவனம் முன்வந்தது

(கொழும்பு)

இலங்கையில் முதற்தடவையாக சமுத்திரமீன்பண்ணையை அறிமுகம் செய்ய ஓசியன்பிக் நிறுவனம் முன் வந்துள்ளது.

ஓசியன்பிக் முதலீட்டுச் சபையின் ஒரு புதிய கருத்திட்டமாக கடல்மீன் பண்ணை திருகோணமலை கடற்கரையில் அமைக்கப்படவுள்ளது.

இக்கருத்திட்டத்தின் நோக்கமானது **பொறுப்பு வாய்ந்த பண்ணை** என்ற தொனிப் பொருளில் தமக்கு தேவையான உயர்தரமான கடல் உணவுகளை கடலில் சென்று பிடிப்பதை தவிர்த்து பண்ணைகளில் பெற்றுக் கொள்வதற்கான மேடையை அமைத்துக் கொடுப்பதேயாகும்.

உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் புள்ளிவிபர அறிக்கைக்கிணங்க உலகில் கிட்டத்தட்ட 50 வீதமான மீன் உற்பத்தியானது மீன் பண்ணை வளங்களில் இருந்தே பெற்றுக் கொள்ளப்படுகிறது.

ஆனால் இலங்கை இந்தசமநிலையைப் பேண முடியாமல் மிகவும் பின் தங்கிய நிலையில் தனது தேவையின் 90 வீதமானவற்றை கடலில் சென்று பிடித்தலிலேயே தங்கியுள்ளதுடன் இதனால் மீனினங்கள் வரையறையற்ற நிலையில் மிக விரைவில் அழிவடைகின்றன.

ஓசியன்பிக்கின் முயற்சியினால் இலங்கையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி அந்த சமநிலையை பேணுமளவிற்கு கொண்டு செல்ல முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஓசியன்பிக் ஸ்தாபகரும் பணிப்பாளருமான இர்பான் தாசிமுக்கும் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் கலாநிதி லக்ஷ்மன் ஜயவீரவுக்கும் இடையே இது தொடர்பில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

இக்கருத்திட்டத்திற்கமைய திருகோணமலை கடற்கரையை அண்டிய திறந்த கடற்பரப்பில் இந்த பண்ணைகளை அமைக்கதிட்டமிடப்பட்டுள்ளது.

முதலாவது கட்டமைப்பு தொகுதியிலிருந்து இனிவரும் ஆண்டுகளில் ஆயிரம் தொன் எடையுள்ள அறுவடையைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் நிறுவப்பட்டுள்ளது.

40 வருட காலமாக சல்மன் றெயின்போ றவுற் மற்றும் ஹலிபட் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் பிரபல்யம் பெற்ற ஸ்கொட்டிஸ் பண்ணை கம்பனியை பங்காளராக கொண்டு இதனை ஆரம்பிக்க ஓசியன்பிக் உத்தேசித்துள்ளதுடன் திருகோணமலைபண்ணையை உலகில் உள்ள ஏனைய உயர்தர பங்காளிகளுடைய நிலைக்கு உயர்த்துவதே அதன் நோக்கமுமாகும். இலங் கையின் முன்னைய நீர்வள உற்பத்தி முயற்சிகள் யாவும் கடலோரிகளிலும் நன்னீர் மீன்வளர்த்தலிலும் தரையில் சிறிய குளங்களி லுமே அமைந்திருந்தன.

ஆனால் ஓசியன்பிக் கடல்வள உற்பத்தியின் சிறப்புத்தன்மையை இனங்கண்டுள்ளது. சமுத்திரத்தினால் வழங்கப்படும் ஆழமான மற்றும் அலைகளின் நீரோட்டத்தையும் இணைந்ததாக உள்ள ஓசியன்பிக் திருகோணமலையின் திறந்த கடலில் ஒரு சில இடங்களை தனது நடவடிக்கைகளுக்காக தெரிந்தெடுத்துமுள்ளது.

இக்கருத்திட்டத்தின் மொத்த முதலீடு ஏறக்குறைய 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இக் கருத்திட்டமானது இலங்கையின் மீன்பிடித்துறையை சிறப்பான நிலைக்கு உயர்த்தும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை என்பதுடன் 100 இற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்களையும் வழங்கி பட்டதாரிகளுக்கு பயிற்சியளிப்பதற்கான புதிய பாதையாகவும் இறக்குமதிக்கான ஒரு மாற்றீடாகவும் பெறுமதியுடன் கூடிய உற்பத்தியாகவும் இதனைக் கொள்ளலாம்.

இதோடு சம்பந்தப்பட்ட ஏணையவர்த்தகங்களையும் மேல் நீரோட்டம், கீழ் நீரோட்டம் ஆகியவற்றில் இதற்கு தேவையான உணவு உற்பத்தியையும் மேற்கொள்ள முடியும். (அ-2)

# மாபெரும் இலவச கருத்தரங்கு

E-TRANSITION (PVT) LTD நிறுவனத்தால் வரும் க.பொ.த உ/தபரீட்சையை முன்னிட்டு வன்னி மாணவர்களுக்கான இலவச முன்னோடி கருத்தரங்கு முல்லைத்தீவு கல்வி வலயத்தின் அனுசரணையுடன் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை வித்தியானந்தா கல்லூரி, புதுக்குடியிருப்பு ம.வி., உடையார்கட்டு ம.வி., அளம்பில் றோ.க.வித்தி ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

இதில் பிரபல விரிவுரையாளர்களால் செய்முறை விளக்கத் துடன் கூடிய தமிழ் மற்றும் புவியியல் பரீட்சை வினாத்தாள் ஒன்று கலந்துரையாடப்படவிருப்பதனால் மாணவர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு E-TRANSITION (PVT) LTD நிறுவன பொது முகாமையாளர் ஜெயசீலன் அறிவித்துள்ளார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 | 120 |
| தக்காளி | 100 | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 60 | 40 |
| கோவா | 100 | 130 | 120 | 120 |
| கரட் | 100 | 100 | 140 | 160 |
| பூசணி | 30 | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 140-180 | 140-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | — | 100 |
| பயற்றங்காய் | 40 | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 | 150 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 120 | 100 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 300 | 150 |
| போஞ்சி | 120 | 140 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 10 | 20 | 20 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 30-35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 120 |

# இராசி பலன்

04.07.2013
(ஆனி 20, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
துவாதசி முழுவதும்
கார்த்திகை பின்னிரவு 1.33 மணிவரை
இராகுகாலம் 1.27-2.57 மணிவரை
சுபநேரம் 7.27-8.57 மணிவரை
கார்த்திகை விரதம்

**மேடம்** காலையிலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள், உடல்நலம் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை, பணம் பற்றிய கவலை தீரும்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம்தேடி வரலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், அந்நியரின் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும், தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறத் தொடங்கும்.

**துலாம்** குடும்பத்தில் இடையிடையே சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு குறையும், செலவுகள் அதிகரிக்கும், மறதியால் ஒருசில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள்.

**விருச்சிகம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**தனுசு** அரசியல் செல்வாக்கு மேலோங்கும், வியாபார விரோதம் விலகும், கடன்சுமை குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், உடல் நலம் சீராகும்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்** நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தாய்வழி உறவினர்களால் ஏற்பட்ட தகராறுகள் அகலும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை தொழில் நடவடிக்கைக்கு 2.7 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)


யாழ். நெடுந்தீவு பிரதேசத்தில் பனைசார் தொழில்நடவடிக்கையை மேம்படுத்தும்நோக்கில் பனை அபிவிருத்திச் சபையின் காரியாலயம் அமைப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நெடுந்தீவு




பிரதேச செயலர் ஆழ்வார்பிள்ளைசிறி தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்க வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள 100 மில்லியன் திட்டத்தில் இந்த அலுவலகமும் அமைக்கப்படுமெனவும் இதன் மூலம் அங்குள்ள பனைசார் தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதோடு கைப் பணிப் பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடிய இடமாக அந்த அலுவலகம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

**செய்தி:** மேர்வின் சில்வாவுக்கு எதிராக செயற்படுவோருக்கு தண்டனை கிடைக்க வேண்டி கோவில்களில் வழிபாடு.



நன்றி: மிரர்

# வடக்கில் 868 பாடசாலைகளுக்கு பால் வழங்கும் திட்டம் ஆரம்பம்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் உள்ள 868 பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற ஒரு இலட்சத்து 91 ஆயிரம் மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார். வடக்கு மாகாணத்திலுள்ள ஒரு இலட்சத்து 51 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.**

மகிந்த சிந்தனையின் கீழ் மாணவர்களுக்கான உணவு, பால்,முட்டை ,விற்றமின் வில்லைகள் வழங்கும் செயற்றிட்ட அங்குரார்ப்பண நிகழ்வு யா/நல்லூர் சென் பெனடிக் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இவ் அங்குரார்ப்பன நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த 35 வருட காலமாக நிலவிய போரின் பின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திடமானதொரு கொள்ளையை வகுத்து செயற்பட்டு வருகின்றார்.

வடக்கு மாகாணத்தில் குழந்தைகளுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதோடு பாடசாலை மாணவர்களுக்கென போசாக்கு திட்டத்தையும் உருவாக்கியுள்ளார்.

ஏ9 வீதி திறந்து வைக்கப்பட்ட பின் ஒரு இலட்சத்து 51 ஆயிரம் மாணவர்களுக்கு மதிய உணவும் வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டமும் ஜனாதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தற்போது வடக்கு மாகாணத்தில் உள்ள 868 பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற ஒரு இலட்சத்து 91 ஆயிரம் மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார். (அ-4)

# இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் சுயதொழில் கடன்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினரால் நடத்தப்படும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கருணாலயத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பொது முகாமையாளர் (நிஸ்கோ) ப.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில்,யாழ். மாவட்டத்தில் வசிக்கின்ற 18 தொடக் கம் 29 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள் சுய தொழிலை ஆரம்பிப்பதற்கும் மேற்கொள் கின்ற சுய தொழிலை விருத்தி செய்வதற்கான கடன் வழங்குதல் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய இளைஞர்சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது காலை 10 மணி தொடக்கம் காலை 11 மணிவரை சிந்மயானந்தா சுவாமிகள் வதிவிட ஆச்சிரம ஜாக்கிரத சைதன்ய சுவாமி களினதும் தொடர்ந்து காலை 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் த. ஈஸ்வரராஜாவினதும் விரிவுரைகள் இடம்பெறும்.

இக் கருத்தரகில், ஆகக் கூடிய கடன் தொகையான ரூபா 2இலட்சத்து50 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அரச வங்கிகளினூடாக மிகக் குறைந்த வட்டியில் வங்கி நடைமுறைக்கு அமைவாக இக்கடன் கொடுக்கப்படவுள்ளது.

மேலும், இவ்வங்கிக் கடன் பெற்றுக்கொள்ள விரும்பும் இளைஞர் யுவதிகள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தொழில் பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் பயிற்றுவிக்கும் அதிகார சபை, ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு நிறுவனத்தில் தாங்கள் துறைசார் சுய தொழிலுக்கான பயிற்சியைப் பெற்று அதற்கான சான்றிதழ்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

எனவே இக்கடன் பெற்று சுய தொழிலை மேற்கொள்ள விரும்புகின்ற இளைஞர் யுவதிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக சுய விபரத்துடன் பயிற்சி பெற்ற நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ் ,பிறப்பு அத்தாட்சி பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் போட்டோ பிரதிகள் ஆகியவற்றுடன் பொது முகாமையாளர் (நிஸ்கோ), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய வீடமைப்புக் கட்டடம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பித்தல் வேண்டும் என இம்மன்ற பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (அ)

## 175 ஆவது ஆண்டு நிறைவில் முத்திரை வெளியீடு

யாழ். ஹாட்லி கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்திரை வெளியீட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தபால்மா அதிபர் முத்திரையை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

முத்திரை வெளியீட்டுக்கு அனுசரணையை பழைய மாணவர் நா. விஷ்ணுகாந்தன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-19)

# நூல் வெளியீடும் கௌரவிப்பும்

ஏ.கே. கீர்த்திராஜன் ஆசிரியரினால் எழுதப்பட்ட செய்யுள் தொகுப்பு நூல் வெளியீடும் புலமைமிகு மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிறவுண் வீதி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி ஆறு.திருமுருகனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.மீரா, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் த.ஜெயசீலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கொழும்பு மருதானை தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் பா. உமாசங்கர், தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக கணக்காளர் க. பார்த்தீபன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.அத்தோடு நூல் அறிமுக உரையை முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரி ஆசிரியர் வேல்நந்தகுமார் ஆற்றவுள்ளார்.(அ-9-19)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் கோயில் மணவாளக் கோல அலங்கார உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 26 நாட்கள் நடைபெறவுள்ளன.

உற்சவத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (அ-5)





**வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்திரனராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.**

(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை இரத்துச்செய்ய சட்டமூலத்தை சமர்ப்பிக்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு சம்பிக்க இடித்துரைப்பு

(கொழும்பு)

**13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கான சட்டமூலத்தை ஜனாதிபதி உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். மாகாணசபை முறைமையை இரத்துச் செய்யும் தேசிய ஒருங்கிணைப்பினால் நேற்று முன்தினம் மஹரகமவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்கான சட்டமூலத்தை ஜனாதிபதி உடனடியாக பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதனை நிறைவேற்றுவதற்கான பலத்தை நாம் பாராளுமன்றத்தில் வழங்கத் தயாராகவுள்ளோம்.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது நாட்டின் ஜனநாயகத்திற்கு முற்றிலும் விரோதமானது. எமது நாட்டில் பயங்கரவாதத்தை இந்திய மத்திய அரசும் தமிழ் நாடுமே உருவாக்கின. இந்நிலையில் தமிழ் பிரிவினை வாதிகள் இந்தியா மற்றும் அமெரிக்காவின் உதவியுடன் 13 ஆவது திருத்தத்தை மேற்கொள்வோம் என கூறுகின்றனர்.

இராணுவத்தினர் வடக்கில் ஈழம் மலரவா தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். இந்நிலையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் வடக்கு மாகாண சபை பிரிவினை வாதிகளின் கையில் போகுமாயின் அது ஈழத்திற்கு வழிவகுக்கும்.

வடக்கு மாகாண சபையைப் பிரி வினைவாதிகள் கைப்பற்றுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். இதேவேளை, இவ்வளவு காலமும் முஸ்லிம் மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்படும் போது குரல் கொடுக்காத முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரவூப் ஹக்கீம் இப்போது 13 இற்கு ஆதரவாக கூக் குரல் கொடுக்கின்றார்.

மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதற்காக எல்லோரும் ஒன்றிணைந்து போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் ஜாதிக ஹெல உறுமய, பொதுபல சேனா மற்றும் சிங்கராவய போன்ற 27 இற்கும் மேற்பட்ட பௌத்த அமைப்புக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புலிகளுக்கு ஆயுதங்களை கடத்திய தமிழர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு இராணுவத் தொழில் நுட்பங்களை பெற்றுக் கொடுக்க உதவியதாக அமெரிக்க நீதிமன்றத்தில் சுமத்தப்பட்ட குற்றத்தை கனடாவின் வாட்டர்லூ பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியான தமிழர் ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார். கடந்த 2004 செப்டெம்பர் மாதத்திற்கும் 2006 ஏப்ரல் மாதத்திற்கும் இடையில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவாளருக்கு விமான கருவிகள், நீர்மூழ்கி, போர்க் கப்பல் வடிவமைப்பு மென்பொருட்கள், இரவுப் பார்வை கருவிகள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை பெறுவதற்கு இவர் உதவியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நியூயோர்க், புரூக்லின் நீதிமன்றத்தில் குறித்த நபர் மீது நேற்று முன்தினம் நடத்தப் பட்ட விசாரணையின் போது விடுதலைப் புலிகளுக்குத் தான் இராணுவத் தொழில்நுட்பங்களைப் பெறுவதற்கு உதவியதை ஒப்புக் கொண்டார். இதையடுத்து அவருக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

2006 இல் ரொறண்டோவில் கைது செய்யப்பட்ட இவர் ஏற்கனவே சிறைத்தண்டனை அனுபவித்து வருவதால் அவரது தண்டனைக் காலம் குறைக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளதென கனேடிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையில் பிறந்து கனேடியக் குடியுரிமை பெற்ற இவர், தண்டனைக்காலம் முடிந்தபின்னர் அமெரிக்காவில் இருந்து கனடாவுக்கு நாடு கடத்தப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)


வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**பயிற்சியே சிகிச்சை**

**இலவசமாக உடற்பயிற்சி வழங்கப்படும்**

**இடம்:** 14/4, ஆஸ்பத்திரி வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
**பயிற்சி நேரம்:** மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை
**தினம்** : வியாழன், வெள்ளி, சனி
**தொடர்பு :** 021 320 2286

(இ)



உ
குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்**

**அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்விற்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

✔ எளிய முறை உடற் பயிற்சிகள் ✔ எளிய முறை காயகல்பப் பயிற்சிகள்
✔ எளிய முறை தியானப் பயிற்சிகள்
✔ அகத்தாய்பு எனும் தற்சோதனைப் பயிற்சிகள்

இன்றைய நவநாகரிக உலகில் நாம் எல்லோரும் அழகாகவே இருக்க ஆசைப்படுகின்றோம். நிலையற்ற புற அழகிற்கு நாம் அளவற்ற பணத்தைச் செலவுசெய்கின்றோம். ஆரோக்கியம், நோக்கிய பயிற்சி பற்றி நாம் சிந்தித்ததுண்டா? உண்மையான அழகு என்பது எமது உடல் மனம் ஆரோக்கியத்துடன் இருப்பது தான். இதுவே வாழ்வின் நிலையான அழகு. மன அமைதி, நோய் எதிர்ப்புசக்தி, குடும்ப அமைதி போன்ற அனைத்தையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக வடிவமைக்கப்பட்ட அற்புதமான பயிற்சியே மன வளக்கலை யோகா பயிற்சியாகும்.

பயிற்சி பெற்றவர்களின் பாராட்டுக்களுக்கிணங்கவும் பலரின் வேண்டுகோளுக்கிணங்கவும் பயிற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க இருக்கின்றோம். புதிதாகப் பயிற்சிகள் பெற விரும்புபவர்களுடன் ஏற்கனவே பயிற்சிகளைப் பெற்றவர்களும் பயின்று பயன்பெற்றுக்கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் : 06.07.2013, 07-07-2013 மாலை 4.30 மணி
08.07.2013, 09.07.2013, 10.07.2013, 11.07.2013
12.07.2013, மாலை 5 மணி
இடம் : நாச்சிமார் கோயில் திருமண மண்டபம், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

நிகழ்ச்சி நிரல்
✔ இறைவணக்கம் குருவணக்கம்
✔ தொடக்கவுரை : மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் , அறங்காவலர், (இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை) அறிமுகவுரையும், பயிற்சி வழங்கலும்
✔ மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி எஸ்.இந்திரா அம்மா அவர்கள்

**அகத்தாய்வு -I (தற்சோதனைப் பயிற்சி)**
காலம் : 06.07.2013, 07.07.2013 சனி, ஞாயிறு
நேரம் : காலை 8.30 மணி- பிற்பகல் 1.00 மணிவரை
இடம் : வண்ணார் பண்ணை தவமையம்

மனவளக்கலை மன்றத்தினால் வழங்கப்பட்ட எளியமுறை உடற்பயிற்சிகள் காயகல்ப் பயிற்சி ஆகிய 6 நாள் பயிற்சிகளை முடித்த அன்பர்களுக்கு அகத்தாய்வு I பயிற்சி நடைபெறவுள்ளது. இதில் வாழ்க்கையின் வெற்றிக்கு வழிகாட்டக்கூடிய விதத்தில் பஞ்சபூத நவக்கிரகதவம், பஞ்சேந்திரியதவம் இவற்றுடன் எண்ணம் ஆராய்தல் ஆசை சீரமைத்தல், வாழ்வின் நோக்கம், வாழ்த்தும் பயனும் இவைகள் கற்றுக் கொடுக்கப்படவுள்ளன. ஆறுநாள் பயிற்சி பெற்ற அனைவரும் கலந்துகொண்டு பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**அகத்தாய்வு -III (தற்சோதனைப் பயிற்சி)**
காலம் : 13.07.2013, 14.07.2013 சனி, ஞாயிறு
நேரம் : காலை 8.30 மணி - பிற்பகல் 01. மணிவரை
இடம் : வண்ணர்பண்ணை தவமையம்

அகத்தாய்வு II பயிற்சி முடித்த அன்பர்களுக்கு அகத்தாய்வு III பயிற்சி வழங்கப்படவுள்ளது. மனிதருள் வேறுபாடு ஏன், குடும்ப அமைதி பிரபஞ்ச உயிரினத்தின் மாற்றம், பால் உணர்வும் ஆன்மீக மேம்பாடும் அன்பும் கருணையும் இவை போன்ற தத்துவவிளக்கங்களும் சிறப்பு தவங்களான ஒன்பது மையத்தவம், நித்தியானந்த தவம் இவைகளும் உடலிலுள்ள சீவகாந்தத்தை பெருக்கும் பயிற்சியான கண்ணாடி பயிற்சியின் விளக்கமும் கொடுக்கப்படவுள்ளது.

**பயிற்சி வழங்குபவர் : பேராசிரியர் அருள்நிதி எஸ்.இந்திரா அம்மா** அவர்கள்

வண்ணார்பண்ணை தவமையவழி
நாச்சிமார் கோயிலை அடுத்துவரும் அரசடிச்சந்தியிலிருந்து கேசாவில் பிள்ளையார் கோயிலை நோக்கிய முச்சந்தியினுள்ள ரான்ஸ்போமருக்குப் பக்கத்திலுள்ள முதலாம் ஒழுங்கையினுள்ளது.

**தொடர்புகளுக்கு:** 077 772 6732, 077 123 5646, 071 4403268
077736 8745

**இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை**
வண்ணார்பண்ணை தவமையம்,
நாச்சிமார் கோயிலடி, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3862)


## பணியாளர்கள் கைது!

பிரித்தானியா கென்ட் சிட்டிங் போர்ன் பகுதியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த மூன்று இலங்கைப் பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் பணியாற்றியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 22,30 மற்றும் 33 வயதைக் கொண்டவர்கள் என்று கென்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட பின்னர் குறித்த மூவரும் குடிவரவு முகாம் ஒன்றுக்கு மாற்றப்பட்டனர்.

பிரித்தானியாவில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள் தொடர்பில் குற்றம் நிரூபிக்கப்படுமானால் அவர்களுக்கு 10 ஆயிரம் பவுண்ஸ்கள் அபராதமாக விதிக்கப்படும் என்பது நியதியாகும். (அ-2)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து(v)<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா : 19 செவ் 7<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: NCT(Civil Eng) அரச ஒப்பந்தக்காரர்<br>தொ.இ:B652 | பிறப்பு: 1975 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா:35.25 செ 1<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BAஆசிரியர்<br>தொ.இ:G112 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா : 87 செவ் 1<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L கணக்காளர் தனியார்<br>தொ.இ:B662 | பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா :21 சூ,செ 9<br>உயரம்: 5'3.5 "<br>தகைமை/தொழில்: BSc, CIMA Accountant<br>தொ.இ:G895 |
| பிறப்பு: 1978 RC(V)<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Electronic ஜேர்மன்<br>தொ.இ:B663 | பிறப்பு: 1983 இந்து(V,KO)<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா : 45 செவ் 8<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/Lதையல் டிப்ளோமா, மேக்கப்<br>தொ.இ:G896 |
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 27.75<br>உயரம்: 5' 10"<br>தகைமை/தொழில்: BCom, HNDA,MAதிட்டமிடல்<br>தொ.இ:B665 | பிறப்பு: 1976 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா : 16.5 செவ் 4<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில; A/L,CIMA(part2)<br>தொ.இ: G897 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குநோய் விழிப்புணர்வு



யாழ்ப்பாணத்தில்...




நெல்லியடியில்....

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் முன்பாக மாணவர்கள் நேற்றுக்காலை விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுலோகங்களைத் தாங்கியவாறு நின்றிருந்தனர்.

மத்திய சுகாதார அமைச்சினால் தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு வாரமாக இம்மாதம் தொடக்கம் எதிர்வரும் 7ஆம் திகதிவரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாகவே பாடசாலை மட்டத்தில் நேற்றையதினம் மாணவர்கள் மேற்படி விழிப்புணர்வு செயற்பாட்டில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# தொண்டராசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் நியமனம் பெறாத தொண்டர் ஆசிரியர்களுடனான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள ரிசாத் பதியுதீனின் அமைச்சு பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதுவரை நியமனம் பெறாத வவுனியா மாவட்ட தொண்டர் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அமைச்சரின் மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். (அ-250)

# துமிந்த தன்னைத்தானே சுட்டுக் கொண்டார்

## பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியம்

(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட துமிந்த சில்வா தனக்குத்தானே சுட்டுக்கொண்டார் என்று முல்லேரியா ராஹுல வித்தியாலயத்துக்கு அருகில் கூடியிருந்தவர் தெரிவிப்பதைத் தான் செவிமடுத்ததாக பொலிஸ் விசேட அதிரடிப் படை கான்ஸ்டபிள் சுரங்ககுமார சாட்சியமளித்தார்.

ஜனாதிபதி தொழிற்சங்கத்தின் ஆலோசகரான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வரின் கொலை வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த கொலையின் சந்தேகநபர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட 13 பேருக்கு எதிராக இந்த வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் துமிந்த சில்வா மன்றில் ஆஜரானார். பாரத லக்ஸ்மன் தரப்பினர் சார்பில் மன்றில் ஆஜரான வழக்கறிஞர் சந்தேகநபரான துமிந்த சில்வாவினால் மன்றில் ஆஜராகி பதிலளிக்க முடியுமா என்று கேட்டறியுமாறு நீதவானிடம் குறிப்பிட்டார்.

இருப்பினும் அவரது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்ட நிலையில் சாட்சியாளர் அழைக்கப்பட்டார். இதன்போது சாட்சியாளராக மன்றில் ஆஜரான பொலிஸ் விசேட அதிரடிப்படை கான்ஸ்டபிள் சுரங்ககுமார தான் கடந்த 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி முல்லேரியா ராஹுல வித்தியாலயத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்ததாகவும் கைத்துப்பாக்கிகள் மற்றும் ரீ-56 ரக துப்பாக்கிகள் போன்றன பலரதும் கைகளில் இருந்ததாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து சாட்சியமளித்த அவர், அப்போது அப்பகுதிக்கு டி.பென்டர் ரக வாகனமொன்று வந்தது. அதில் துமிந்த சில்வாவும் இருந்தார்.

அந்நிலையில் அப்பகுதியிலிருந்த பெண்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது என்றார்.பாரத மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட துமிந்த சில்வா தன்னைத் தானே சுட்டுக்கொண்டார் என்று அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டதை நான் செவிமடுத்தேன் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நீதவான் டிபென்டர் ரக வாகனத்தில் இருந்தவர்கள் தற்போது நீதிமன்றத்தில் உள்ளனரா என்று வினவினார். அதற்கு பதிலளித்த சாட்சியாளர் இல்லை என்று குறிப்பிட்டார்.

இதனையடுத்து இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (அ-2)

# சிறுவர் இல்லங்களில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் வாழ்கின்றனர்

வடக்கு மாகாணத்திற்குட்பட்ட ஐந்து மாவட்டங்களிலுமுள்ள சிறுவர் இல்லங்களில் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் தங்கி வாழ்ந்து வருகின்றனர் என வடக்கு மாகாணத்தின் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளர் தி.விஸ்வரூபன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக பெற்றோரை இழந்த நிலையிலும் பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையிலும் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் தற்பொழுதும் வடமாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் பலர் தற்பொழுது அவர்களது பெற்றோர்களுடன் இணைக்கப்பட்டும் வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் யுத்த காலத் தில் பெற்றோரைப் பிரிந்த நிலையிலும் பெற்றோரையிழந்த நிலையிலும் தற்பொழுதும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் தங்கி வாழ்ந்து வருகின்றனர் என்பதோடு அடிப்படை வசதிகள் அற்ற சிறுவர் இல்லங்களிலும் பல துஷ்பிரயோகங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# 9.2 மில்லியன்ரூபா செலவில் தொ.நு.ஆய்வுகூடம் நிர்மாணம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 9.2 மில்லியன்ரூபா செவில் தொழில்நுட்ப ஆய்வு கூடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவ்ஆய்வுகூடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றையதினம் இடம் பெற்றது.

இக்கட்டட அடிக்கல்லை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நாட்டிவைத்தார்.

மஹிந்தோதய திட்டத்தின்கீழ் இத் தொழில்நுட்ப ஆய்வுகூடம் 9.2 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இத்தொழில்நுட்ப பாடம் வடக்கு மாகாணத்திலுள்ள 14 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு எதிர்வரும் 15 ஆம் திகதி இந்துக்கல்லூரியிலும் ஆரம்பமாகவுள்ளது.

மேலும் அடுத்த வருட காலப்பகுதியில் 4கோடிரூபா செலவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தொழிற்றுறைப் பாடங்களுக்கான கட்டடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. (அ-4)

# கிராம சேவையாளர்களுக்கு கைபேசி வழங்கினாராம் விமல்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் கடுவெல மாநகர சபைக்குரிய கிராம சேவகர் பிரிவுகளில் பணியாற்றும் 57 கிராம சேவகர்களுக்கு கையடக்க தொலைபேசிகளை அமைச்சர் விமல் வீரவன்ச வழங்கியதாகவும் அது இலஞ்சம் வழங்கியதற்கு ஈடானது என மாநகர சபையின் முதல்வர் ஜி.எச் புத்ததாச தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு வரும் இச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான இலஞ்சத்தை வழங்குவது பாரதூரமானது எனவும் இது பற்றி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, தேர்தல் ஆணையாளர், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் முறையிடப் போவதாகவும் புத்ததாச மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான தமிழக மீனவர்கள் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்கள் 25 பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி 5 றோலர் படகுகளில் நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்தியா இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 25 மீனவர்கள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு யாழ். நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றம் அவ் 25 மீனவர்களுக்கு விளக்கமறியல் விதித்த நிலையில் குறித்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த மீனவர் கள் அனைவரும் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (அ-4)



யாழ்.மாநகர சபை முன்பள்ளி விளையாட்டுவிழா நேற்றையதினம் நடைபெற்றது. இவ்விளையாட்டு விழாவில் முன்பள்ளி சிறார்கள் போட்டிகளில் பங்குபற்றுவதையும் சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் கலந்து கொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர்தர வகுப்பில் எல்லோரும் தமது காலத்தை செலவிடுவது நியாயமானதா?

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி




பேராசிரியர் மா.சின்னத்தம்பி

### அறிமுகம்

எமது நாட்டில் பாடசாலைக்கல்வி பதின் மூன்று ஆண்டுகால நீட்சியைக் கொண்டுள்ளது. ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி என்பவற்றின் நிறைவில் கல்லூரி மட்டம் எனப்படும் தரம் 12, தரம் 13 வகுப்புக்களில் எல்லா மாணவர்களும் கற்பது வினைதிறனுடையதா என்ற கேள்வி தற்போது முனைப்படைந்து நிற்கிறது.

க.பொ.த.சாதாரண தரத்தின் பின் இரண்டரை ஆண்டுகள் பள்ளியில் செலவிடுவதன் இலக்குகள் பற்றிய தெளிவு பெற்றோரிடமும் மாணவரிடமும் காணப்படுகின்றதா என்பன முதன்மையான வினாக்களாகும்.

எல்லா மாணவரும் பல்கலைக்கழகம் நுழைய வேண்டுமா? அதற்கு கட்டாயமாக இந்த க.பொ.த.உயர்தரம் கற்க வேண்டுமா? மாற்றுவழிகளைப் பரிசீலிக்கக் கூடாதா?

தமது இரண்டரை வருடங்களை செலவிடுவோர் தாம் இப்பரீட்சைகளில் வெற்றியடைவது தொடர்பான தமது வசதி, தேவை, ஆற்றல் பற்றிய மதிப்பீட்டைச் செய்வது பயனுடையதா? தமது விரயங்களுக்கும் விரக்திக்கும் உரியதாக பெரும்பாலனவர்கள் இந்த க.பொ.த.உயர்தர கற்கைகளை தொடர்ந்து செல்வதில் நியாயங்கள் உள்ளனவா?

இத்தகைய கேள்விகளுக்குரிய தேவைகளையும் அவற்றுக்கான விடைதேடும் சமூக் சிக்கனம் மற்றும் குடும்ப நலன் சார்ந்த அணுகுமுறைகளையும் ஆராய வேண்டும். இன்று அவை பற்றிக் கலந்துரையாடப் படுகின்றது.

### க.பொ.த.உயர்தரம்-கட்டாய தகைமைதானா?

இலங்கையில் வருடாந்தம் சராசரியாக மூன்று இலட்சம் குழந்தைகள் பாடசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர். பதினொராம் ஆண்டு முடிவில் க.பொ.த. சாதாரண தேர்வுக்கு தோற்றுபவர்களாக கடந்த வருடம் 268,995 மாணவர்கள் காணப்பட்டனர். ஆனால், க.பொ.த.உயர்தர கல்வியை தொடரக்கூடிய தகுதியுடையவர்கள் 174,160 பேர் மாத்திரமே காணப்பட்டனர். இவர்களில் 26,000 பேர் மாத்திரம் இலவசமாக உயர் கல்வி பெறுவதற்கு அரச பல்கலைக்கழகங்களில் இணைய முடியும். ஏறக்குறைய 130,000 பேர் இந்த வாய்ப்பை பெற முடியாது. மாற்றுவழிகளையே நாடவேண்டும்.

க.பொ.த.சாதாரண தரத்தில் கூட எல்லாப் பாடங்களிலும் சித்திபெறாதவர்கள் 11,100 மாணவர்கள். 13 வருடப் படிப்பின் பின்பும் இலவச உயர் கல்வியை பெற முடியாதவர்கள் 130,000 பேராவர்.

இப்படியே விரயங்களை கண்டு கொள்ளாமல் இருப்பதும் மாற்றுவழிகளை ஊக்குவிக்காமல் இருப்பதும் நியாயமானதா?

13 வருட படிப்பை நிறைவு செய்து பரீட்சைக்கு தோற்றுயோரில் 44%-62% வரையிலானோர் பல்கலைக்கழகத்துக்கான தகுதி பெற்றாலும் அவர்களில் 17%னர் மாத்திரமே இலவச உயர்கல்வி வாய்ப்பை பெற முடிகிறது.

இந்த பின்னணியில் மாற்று வழிகளைப் பாடசாலைகளும் பரிந்துரைத்தால் என்ன? முடிவுகளை பெற்றோர் மேற்கொள்ளட்டும். ஆனால், மாற்றுப் பாதைகளைத் தெளிவுபடுத்துவதில் பாடசாலைகள் சற்று கூடிய அக்கறை காட்டினால் என்ன? சனசமூக நிலையங்களும் இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினால் என்ன?

க.பொ.த.சாதாரண தர சித்தியென்பது எமது நாட்டில் மிகவும் அவசியமானது. அரசாங்கம் அதற்காகவே கட்டாய கல்வி வயதை பதினாறாக உயர்த்தியுள்ளது. இந்த மட்டத்துடன் பெரும்பாலானவர்கள் தமது பாடசாலைக் கல்வியை நிறுத்தி புதிய பாதைகளில் பயணித்தால் என்ன?

இலங்கையிலேயே மேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்களில் நகர்ப்புறம் சார்ந்த விழிப்புணர்வுமிக்க பெற்றோர் அவ்வாறு தான் பல முடிவுகளை மேற்கொள்கின்றனர்.

க.பொ.த.உயர்தரம் படித்தல் என்பதன் விரயங்கள் பற்றி பலவீனமான நிலையில் உள்ள குடும்பங்களும் மாணவர்களும் ஆழமாக சிந்திக்க வேண்டும். புதிதாக தென்படும் மாற்று வழிகளில் கவனக் குவிப்பை செலுத்த வேண்டும். அதற்கான நிலைமைகள் வளர்ந்துள்ளன.

எத்தகைய இழப்புக்கள் க.பொ.த.உயர்தர கல்வியுடன் இணைந்துள்ளன.

(1) 17, 18 வயது என்பது துடிப்பும் வினையாற்றலும் கொண்ட வயது நிச்சயம் சித்தியடைவோம் என்று நம்பாதவர்கள் இந்த வயதை வீணாக்குதல் தகுமா?

(2) க.பொ.த.உயர்தர படிப்பு என்பது அதிக செலவுடையது என்பதையும் உணரவேண்டும். பாடசாலைக் கட்டணம், ரியூசன் கட்டணம், உடை, போக்குவரத்து பல்வேறு புறச்செயற்பாடுகளுக்குரிய தேவைகள் தொடர்பாக செலவிடும் தொகை கணிசமானது. குடும்பங்கள் இதனை பதிந்து வைப்பதேயில்லை. ஆனால், கணிசமான செலவுடையது.

(3) ஏதோ ஒரு தொழிலில் இணைந்து உழைக்கக்கூடிய பருவம்; உற்சாகமாக உழைக்கக்கூடிய வயதும் உடல் வலுவும் உடைய காலம். இதனை விரயமாக்க வேண்டுமா?

அல்லது நல்ல தொழிலைத் தெரிவு செய்து அதில் உரிய பயிற்சியையும் அது சார்ந்த தகைமைகளையும் வளர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக் கள் உள்ளன. இவ ற்றை ஏன் விரய மாக்க வேண்டும்.




முன்னேற்றம் என்பது பாடசாலை என்ற ஓடு பாதையில் மாத்திரம் கொட்டிக்கிடக்க வில்லையே!

வளர்வதற்கும் வலிமை பெறுவதற்கும் பல வாய்ப்புக்கள் பாடசாலைக்கு வெளியேயும் பரந்து கிடக்கின்றன. பலர் அவ்வாறு முயன்று முகடுதொட்டு நிமிர்ந்தி ருக்கிறார்கள்.

ஒரு பகுதியினர் பாடசாலை வாழ்வை முழுதாக பெற்று போட்டியில் மிதந்து மேலே வரட்டும். மற்றொரு தொகுதியினர் போட்டியில் தோற்காது தப்பி புதிய வழியில் செல்லவும் முடியுமல்லவா? அவை எவை?

### க.பொ.த.சாதாரண தரத்துடன் உயர்கல்வி

இப்போதெல்லாம் வளர்ச்சியடைந்த நாடுகள் பள்ளிக் கல்விக் காலத்தைக் குறைத்து பட்டம் மற்றும் அதற்கு சமனான கல்வி பெறும் வழிகளில் அக்கறை காட்டி வருகின்றனர். எமது முன்னேற்றம் சார்ந்த சிந்தனைகள் நிதியுதவிகளுடன் அத்தகைய செல்வந்த நாடுகளில் இருந்து தானே இதுவரை வந்துள்ளன. நாம் எப்போதுமே பின்பற்றுநர்தானே!

பதினொரு வருட பாடசாலைக் கல்வியின் முடிவில் அதாவது க.பொ.த.சாதாரண தர சித்தியுடன் பட்டப்படிப்புக்காக இப்போது பல்கலைக்கழகங்களில் நுழையமுடியும்.

பல்கலைக்கழகம் நுழைவதற்கான தகைமைகள் இப்போது பலவாகியுள்ளன. அவை,

1.க.பொ.த உயர்தரம் அல்லது

2.உயர்பாடசாலை மட்டடிப்ளோமா அல்லது

3.பல்கலைக்கழக அடிப்படை வருடதகைமை

இதன்படி 13 வருடப் பாடசாலையில் கற்க வேண்டும் என்ற தேவை இல்லாமற் போகிறது.

இன்று உலகம் முழுவதிலும் க.பொ.த உயர்தரத்தில் இருவருடங்கள் கற்று பல்கலைக்கழகம் நுழையும் ஏற்பாடு தூர்ந்து போகிறது. பதிலாக ஒருவருட அடிப்படைக் கற்கை நெறி (University Foundation Year) போதுமானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து, மலேசியா போன்ற நாடுகளின் பல்கலைக்கழகங்கள் இம்முறையைப் பின்பற்றுகின்றன.

கொழும்பிலும் கண்டியிலும் கடல் கடந்த பல்கலைக்கழகங்களின் கற்றல் நிலையங்கள் பலவும் இவ்வாறுதான் க.பொ.த உயர்தர வகுப்பில் இரு வருடங்கள் செலவிடுவதை நிராகரிக்கின்றன.

### பல்கலைக்கழக அடிப்படைக்கற்கை

இது ஒருவருட கற்கைதான். இது இருவருட க.பொ.த உயர்தர தகைமையை பதிலீடு செய்கிறது. கல்வியில் நிதி விரயம், வயது விரயம் என்பவற்றைத் தவிர்ப்பதற்கு இதனைச் சிபாரிசு செய்து பின்பற்றி வருகின்றனர்.

### இதன் பண்புகள் பின்வருவன

✷பாடத்திட்டம் க.பொ.த உயர்தரத்துக்கு சமமானது

✷கற்பித்தல் முறை பல்கலைக்கழக மாதிரிக்கு இசைவுடையது

✷கட்டாய ஆங்கிலக் கற்கையுண்டு. கேட்டல், பேசுதல், எழுதுதல், விவாதித்தல், விளக்க மளித்தல், சுருக்கக்குறிப்பு எடுத்தல், தலைப்புக்களின்படி கற்றல், ஆராய்ச்சித்திறன் போன்ற பலவும் இதில் விருத்தி செய்யப்படுகின்றன.

✷ மதிப்பீடும் மதிப்பீட்டுப்புள்ளியும் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. பரீட்சை, வகுப்பறை வேலை, ஒப்படை என்பன எட்டு மாதத்துக்கு இரண்டு பருவங்களாக நடத்தப்படுகின்றன. மாணவருக்கு பல வாய்ப்புக்கள் பல மாதிரிகளில் புள்ளிகள் பெறுவதற்கு வழங்கப்படுகின்றன.

உலகில் ஏறக்குறைய 100 பல்கலைக்கழகங்கள் இந்த முறையை அங்கீகரித்துள்ளன. இதற்கு தனியார் உயர் கல்வி நிலையங்களில் கற்பதற்கு செலவு உண்டு. ஆனால், க.பொ.த உயர்தரத்துக்கு செலவிடும் காலம் மற்றும் பணச்செலவு, வாய்ப்புச் செலவு என்பவற்றைக் கணித்து ஒப்பிடல் வேண்டும்.

### அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவன படிப்பு

இலங்கையில் தற்போது பட்டத்தகுதி பெறுதற்கு வகை செய்யும் வியாபாரக் கற்கை, மனிதவளக் கற்கை, வங்கியியல், பொறியியல், உளவியல் போன்ற பலதுறைசார்ந்த கற்கைகளை க.பொ.த உயர்தரம் கற்காமல் தொடரமுடியும்.

க.பொ.த சாதாரண பரீட்சைப் பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் காலத்திலேயே இதனைக் கற்க வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய புதிய வாய்ப்புக்களில் எமது பிரதேச மாணவர்களும் பெற்றோரும் துணிந்து நுழைதல் வேண்டும்.

### க.பொ.த உயர்தரத்தை யார் தொடரமுடியும்?

போட்டி மிகுந்த பல்கலைக்கழக நுழைவுக்கு ஏற்ற பல்வகை நம்பிக்கைகளும் திறன்களும் முனைப்பும் கொண்டவர்கள் மாத்திரமே க.பொ.த உயர்தரத்தில் கற்கவேண்டும்.

தோற்றுப்போவதற்காக இரண்டு வருடங்களையும் பணத்தையும் மாற்று முன்னேற்றங்களையும் செலவிடக்கூடாது.

பின்வருவன தொடர்பாக தெளிவான முடிவுகளை மேற்கொண்டவர்கள் மாத்திரம் பாடசாலைகளில் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் கற்கவேண்டும்.

1.தமக்கு கைவரக்கூடிய கற்கை நெறிகளை மாத்திரம் தெரிவு செய்தல்

2.நீண்டநேரம் தினமும் களைக்காமல் கற்கமுடியும் என்ற மனோதிடம் கொண்டிருத்தல்

3.மிகையான கற்றலுக்கு தயாராக ஏனைய பொழுதுபோக்குகளை தியாகம் செய்யும் திடசிந்தை கொண்டிருத்தல்

4.தமக்கேயுரித்தான கற்றல் மாதிரியை இனங்கண்டு அதனை கவனமாக தொடர்ந்து பின்பற்றக்கூடிய உறுதியான பழக்கப் பண்பாடு கொண்டிருத்தல்

5.ஒவ்வொரு தவணையிலும் 65-80% புள்ளிகளை பெறக்கூடிய கற்றல் தேர்ச்சி மிக்கவர்கள்

6.வினாத்தாள்களை புரிந்து கொள்ளவும் தொடர்ந்து மாதிரி விடைகள் எழுதுவதற்குரிய தீவிர மனப்பான்மையை வளர்த்துக் கொண்டவர்கள்

7.பரீட்சை நியமங்களுக்குரியதாக தமது பழக்கம், ஒழுங்கு, செயல் உறுதி என்பவற்றை தீர்மானத்துடன் வளர்த்துக்கொள்பவர்கள்

8.இரண்டாவது தடவை தோற்றுவதேயில்லை என்றும் மாற்றுவழிமுறைக்குள் செல்வது என்றும் தீர்மானம் மேற்கொண்டவர்கள்

இத்தகைய வலிமை மிகுந்த மாணவராகவும் பரீட்சார்த்தியாகவும் சுய முகாமையாளராகவும் இருப்பவர்கள் மாத்திரமே பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரத்தில் இரண்டு அல்லது இரண்டரை வருடங்களைச் செலவிட வேண்டும்.

க.பொ.த உயர்தரத்துடன் தொழில் பெறுவது அல்லது அதிக பணச் செலவில் தனியார், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கற்பதற்காக செல்வது என்று தீர்மானித்தவர்களும் இவ்வாறு தமது வயதையும் பணத்தையும் செலவிடமுடியும்.

### முடிவுரை

புதிதாக அறிமுகமாகும் முறைகளையும் புதிய மொழிகளையும் புதிய கற்கைகளையும் புதிய உயர்கல்வி நிறுவனங்களையும் நோக்கி எமது பிரதேச மக்கள் தமது அக்கறை மிகுந்த பார்வையை திருப்பவேண்டும்.


பதின்மூன்று வருடங்கள் பாடசாலையில் கட்டாயம் எல்லோரும் செலவிடத்தான் வேண்டுமா என்பதை பலமுறை சிந்திக்க வேண்டும்.

புதிய அறிவுடன் வழிகாட்டக் கூடியவர்களுடன் கலந்துரையாடவும் கலந்துரையாடலின்படி கல்விசார் முடிவுகளை மேற்கொள்ளவும் நாம் தயாராகவேண்டும். செழிப்பு மிக்க புதிய கற்கைகள் கொட்டிக்கிடக் கின்றன. அவற்றை நோக்கிப் பயணிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதில்லை

## கோத்தபாய ராஜபக்ஷ நிறுத்திட்டம்



(கொழும்பு)

**13 ஆவது திருத்தச்சட்டம் குறித்த இந்தியாவின் கருத்துக்களுக்கு செவிசாய்க்க வேண்டிய தில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 13ஆவது திருத் தச்சட்ட அமுலாக்கம் தொடர்பான பிரச்சினை உள்நாட்டு ரீதியானது எனவும், அது தொடர்பிலான தீர்வுத் திட்டங்களும் உள்நாட்டு ரீதியிலேயே முன்வைக்கப் வேண்டுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.**

இந்த விடயத்தில் இந்தியாவின் கருத் துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய அவசி யமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு செய்வதனால் இருதரப்பு உறவு களில் விரிசல் ஏற்படும் என அர்த்தப்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பிரச்சினைக்கு உள்நாட்டு ரீதி யான தீர்வுத் திட்டமே பொருத்தமானது என் பதில் மாற்றுக் கருத்து கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு உள்நாட்டு ரீதியான பொறிமுறைமை ஒன்றின் மூலம் தீர்வு காணப்படவேண்டும் எனவும் 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்த விவாதம் இருதரப்பு உறவுகளை எந்தவகையிலும் பாதிக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா எமது நண்பர் எனவும் இந்த உறவுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள் ளார்.

13 ஆவது திருத்தச்சட்டம் குறித்த சர்ச்சை உள்நாட்டு ரீதியானது என்பதையும் அத ற்கான தீர்வு உள்நாட்டு ரீதியில் முன்வைக் கப்பட வேண்டும் என்பதையும் இந்தியா புரி ந்து கொள்ளவேண்டுமென அவர் தெரிவித் துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் தமிழ், முஸ் லிம்கள் வாழ்ந்து வருவதாகவும் மாகாண சபை முறைமையின் மூலம் அனைவரி னதும் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார். (அ-2)

## ஹெரோயினுடன் நபரொருவர் கைது

பதுளையில் உள்ள பிரபல மகளிர் பாட சாலையொன்றுக்கு அருகில் ஹெரோயி னுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 2 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட் டுள்ளது.

அத்துடன் நேற்று முன்தினம் கைதான குறித்த நபர் 31 வயதான மெதபதன பதுளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் பதுளை நீதவான் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு சம் பவம் குறித்த மேலதிக விசாரணைகளைப் பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (அ-2)

## ஐ.தே.காவிலிருந்து மூவர் அரச பக்கம் தாவுவர்

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளுங் கட் சிக்குத் தாவ தயாராகவுள்ளதாகவும் தங்க ளுக்கான அமைச்சு பதவி தொடர்பில் உடன் பாடு எட்டும் வரை காத்திருப்பதாகவும் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் தொடர்ந்தும் தெரிவித்த அவர், ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து மூன்று நாடாளுமன்ற உறுப் பினர்கள் ஆளுங்கட்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் கட்சி மாறத் தயாராக இருக்கி ன்றனர்.

அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் அளி ப்பதில் உள்ள சிக்கல்கள் காரணமாக அவர் களின் கட்சி தாவல் தற்போதைக்கு பிற் போடப்பட்டுள்ளது.

எனினும் அரசாங்கம் கொண்டு வரும் எந்தவொரு பிரேரணைக்கும் வெளியில் இரு ந்து கொண்டே ஆதரவளிக்க அவர்கள் தயா ராக இருக்கின்றார்கள்.

அவர்களை ஆளுங்கட்சிக்குள் இணை த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (அ-2)

## கழிவு தேயிலையுடன் இருவர் கைதாகினர்

(கொழும்பு)

ஜா-எல பிரதேசத்தில் தேயிலை களஞ் சியசாலை ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு 30 ஆயிரம் கிலோகிராம் கழிவுத் தேயிலைதூள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இக்களஞ்சியசாலையில் இருந்த இருவர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதோடு அங்கிருந்து லொறி மற்றும் உபகரணங்கள் பலவும் பொலிஸரால் கைப்பற்றப்பட்டுள் ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக விசா ர ணைகளுக்காக ஜா-எல பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

## சிறுபோக நெல்வயல்களில் சிற்றுண்ணி தாக்கம் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சிறுபோக நெல் வயல்களில் சிற்றுண்ணித்தாக்கம் பரவலாக காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ள தாக கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப் பாளர் அ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இதன்படி முரசுமோட்டை, ஊரியான், பன் னங்கண்டி, சின்னக்காடு, இராமநாதபுரம், வட்டக்கச்சி, கண்டாவளை, உருத்திரபுரம் ஆகிய பிரதேசங்களில் தாக்கம் கூடியளவு காணப்படுவதாகவும் அக்கராயன்குளம், கரி யாலைநாகபடுவான், சின்ன பல்லவராயன் கட்டு ஆகிய பிரதேசங்களில் தாக்கம் குறைந் தளவில் உள்ளதாகவும்அவர் குறிப்பிட்டுள் ளார்.

* தற்போது நிலவுகின்ற கூடிய வெப்பநிலை யும் ஈரப்பதனும் இதன் பெருக்கத்திற்குச் சாத கமாக அமைகின்றது.

சிற்றுண்ணியின் பாதிப்பினால் நெல் வயல்களில் 5% தொடக்கம் 95% வரையான இழப்பு ஏற்படுகின்றது. சிற் றுண்ணிகள் மிகச்சிறியவையாகையால் வெற்றுக் கண் களால் இவற்றைப் பார்க்க முடியாதுள்ளது. உருப்பெருக்கும் கண்ணாடி மூலம் பார்க் கும்போது முட்டை, குடம்பி, கூட் டுப்புழு என்பவை வெண்ணிறத்தில் இருப் பதைக் காணலாம். நெல் தாள்களைக் கைக ளில் தட்டும்போது இச்சிற்றுண்ணிகள் ஊர் வதை உணரமுடியும். இதன்மூலம் இவற்றை இல குவாக அடையாளங் காண முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவை தாள் மடலுக்குள் இருந்து கொண்டு நெற்தாவரச்சாற்றை உறிஞ்சிக்குடிப்பதுடன் குடலைப் பருவத்தில் கதிர் முளையத்தின் சாற்றையும் உறிஞ்சிக்குடிப்பதால் விவசாயிக ளால் இதனை இனங்கண்டு கொள்ளமுடியா துள்ளது.

தாக்கத்தினால் நெற்தாவர தாளின் நுனி யும் நுனியிலிருந்து இரு பக்க விளிம்புகளும் மஞ்சளாகி பின்னர் கருகுவதையும் அவ தானிக்கலாம்.

இதனைக்கட்டுப்படுத்த புறொபினோ பொஸ் (கல்குறோன், செல்குறோன், செலிக்குறோன், சுபர் குறோன்) பீடைநாசினியை 16 லீற்றர் தாங்கிக்கு 30 மில்லிலீற்றர் என்ற அளவில் ஏக்கருக்கு 300 மில்லிலீற்றர் விசிறலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



யாழ்.கலாலயா பயிற்சியகத்தில் 4 மாத கால அழகுக்கலை மற்றும் உணவு தயாரித்தல், தையல் பயிற்சிகளை நிறைவு செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இவ்வாறு சான்றிதழ் பெற்றவர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை படத்தில் காண லாம்.

## காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வடக்கு மக்களுக்கு கிடைக்கக்கூடாது

### அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

வடக்கு மக்களுக்கு மாகாண சபை அதி காரங்கள் வழங்கப்பட வேண்டுமென உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

வடமாகாண மக்களுக்கு மாகாணத்தை நிர்வாகம் செய்யும் அதிகாரங்களை விரைவில் வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள் ளார். எனினும் காணி மற்றும் பொலிஸ் அதி காரங்கள் வழங்கப்படக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் காணி அதிகாரங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடமே காணப்படுகின்றன எனவும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகவே மாகாணசபைகளுக்கு காணி அதிகாரங்கள் பகிரங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட் டியுள்ளார்.

சிங்கள தமிழ் மக்களுக்கு இடையில் சிறந்த நட்புறவு காணப்படுகிறது. முன்னாள் தேசத் தலைவர்களான ஜே.ஆர்.ஜயவர்த்தன மற் றும் பண்டாரநாயக்க போன்றோர் தமிழ் பூர்வீக உறவுகளைக் கொண்டவர்கள்.

13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலான விவா தம் சம்மந்தமாகவும் அனைத்து கட்சி களும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டியதும் மிகவும் அவசியமானது என் றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனது ஆன்மீகப் பயணம்



## ஆன்மீகம் 51

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி


...அதற்கு இந்துசமய அறநிலைத் துறையின் கமிஷனர் பதவி எனக்கு கிடைத்தால் நாடு முழுவதும் உள்ள தர்மகர்த்தாக்கள், பணக்காரர்கள் என் சொல்லுக்கு கட்டுப்படுவார்கள். இதை சென்னையிலிருந்து கொண்டு செயலாற்ற சாத்தியமில்லை! நான் அந்தப் பதவிக்காக முயன்று கொண் டிருக்கிறேன். ஏன் என்றால் எனக்கு தெய்வீக பணியாற்ற ஒரு நல்ல வாய்ப்பாயிற்றே என்றார் அவர்.

இதுகேட்டு யோசித்தேன். இது எப்படி இருந்ததென்றால் கல்யாணம் பண்ணி வைத்தால் தான் பைத்தியம் தீரும் என்பதுபோல் இருந்தது. இது நடந்த சில வாரங்களுக்குப் பின் தர்ம புரி, சிங்கார பேட்டை அருகே ஒரு அன்பரின் மாந்தோப்பில் நானும் சுவாமியும் தங்கியிருந்தோம். பாணியில் புலம்பத் துவங்கினேன்.

சுவாமி தங்கள் கட்டளையை சிரமேற்கொண்டு அன்னதானத்திற்காக அன்பர்களைத் தேடி அலைந்து அலுத்துவிட்டேன். எனக்கு தெரிந்தவர்கள் என்று எடுத்துக்கொண்டால் கொஞ்சம் வசதியோடு இருப்பவர்கள் சினிமாத்துறை நண்பர்கள் தான். அவர்களும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்கிறார்கள். அடிக்கடி அணுகுவது எனக்கு தயக்கமாக இருக்கிறது. ஆதலால் இதற்கு ஒரு புது வழி கண்டுபிடித்திருக்கிறேன்! அதற்கு தாங்கள் மனது வைத்தால் தான் அது செயற்படும் என்றேன்.

என்ன என்பதுபோல சாமி என்னை நோக்கவும் தயங்கியவாறே சொல்லத் துவங்கினேன்! சாமி ராம் தாஸ் அவர்கள் ஒரு அபிஸர். அவர் நமக்காக எதையும் செய்யக்கூடியவர். நல்ல மனிதர். அவர் இப்போது இருக் கும் பதவி மூலம் நமக்கு எதையும் செய்ய இயலாதவராக இருக்கின்றார். அவர் மட்டும் நம்ம அரசாங்க இந்து சமய அறநிலை ஆட்சித்துறையின் கமிஷனராகிவிட்டால் அவருக்கு தமிழகத்தின் எல்லா கோயில்களின் அதிகாரங்களும் வசமாகும்! அப்போது அவர் மூலம் கிராமப்புற சிறுநகரங்களிலுள்ள செல்வந்தர்கள் அவர் சொல்லுக்கு கட்டுப்படுவார்கள்.

நமக்கு அன்னதானத்திற்கு நிறைய போஷகர்கள் கிடைப்பார்கள் என்றேன். அதன்மூலம் தரும் சிந்தனையை ஊட்ட மக்களுக்கு தூண்டுகோளாய் அமையும் என்றேன்.



பொதிகை மலையில்

அதற்கு நான் என்ன செய்யணும்? என்று வினாவினார் சாமிகள்.

திரு.ராமதாஸ் அவர்களை இந்து சமய அறநிலையை துறை கமிஷனராக உடனே போட வேண்டும் என்றேன். அவ்வளவு தானே. உடனே ஆர்டர் போடறேன் என்றார். ஆர்டர் நீங்கள் போட முடியாது. அரசாங்கம் போட வேண்டும் என்றேன்.

என்னை மீறி ஒரு சிறு துரும்புகூட அசையாது ராஜா என்னிடம் ராமதாஸ் வரட்டும். மறுநாளே உத்தரவு வரும் ஒரு சொட்டு இங்கு மேட்டரை ரொம்ப பெரிசா பேசாதே ராஜா என்றார். அதற்கு உங்கள் ஆசி வேண்டும் அவ்வளவு தான் என்றேன்.

இதைக்கேட்டு சிரித்த, கவலைப் படாதே! இது ஒரு சொட்டு மை விவகாரம் டிரான்ஸ்பர்னு கை எழுத்து தானே போட்டுடலாம். அவர் கமிஷனராயிடுவார் என்று கூறிய மகான் மௌனத்தில் ஆழ்ந்தார். இந்த விவகாரத்தின் பின் ராமதாஸ் அவர்கள் சாமிகளை தேடி வந்தார். தனக்கு கமிஷனார் பதவி கிடைத்தனை கூறி சாமிகளிடம் ஆசி பெற்றார். இதைக் கண்ட நான் சிலை போல் நின்றேன். ஆனால் சித்தர் முகம் சலனமற்று அமைதியாக இருந்தது.

இப்படியும் சில மனிதர்கள் வருடா வருடம் புரட்டாதி மாதம், முழுவதும் ஆச்சிரமத்தில் கோ பூஜை நடைபெறும் பூஜை முடிந்ததும் அன்னதானம் மூன்று காலமும் நடக்கும் குறைந்தது ஐந்நூறு பேர்களாவது உணவு அருந்துவார்கள். மதிப்பிற்குரிய மீனாட்சி நாடி ஜோதிடர் திரு.சாமி அவர்கள் இந்த பூஜைக்குத் தேவையான உதவிகளை பெருமளவில் செய்த தர்மவான்.

பூஜையில் கலந்துகொண்டு அன்னதானம் விழாவை கொண்டாட தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் அன்பர்கள் வருவார்கள். அறநிலையத்துறை ஆணையர் திரு.ராமதாஸ் அவர்களும் வழக்கம் போல் வந்து கலந்து கொண்டார். தம்முடன் மற்றொரு ஐ.ஏ.எஸ் அதிகாரியையும் இம்முறை அவர் அழைத்து வந்திருந்தார்.

தொடரும்

# இந்தியா கச்சதீவைக் கொடுத்துவிட்டு, கைமாறாக அடியை வாங்கிக்கொண்டிருக்கிறது

...இந்த அரசியல் சதுரங்கத்தில் பலியானவன் தமிழக மீனவன்தான். ஒவ்வொரு முறையும் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் போது தமிழக முதல்வராக இருப்பவர் அதனைக் கண்டித்து மத்திய அரசுக்கு சூடாகக் கடிதம் எழுதுவார்கள். அது தொடர்கதையாக இந்தப் பொழுதுவரை நீடிக்கிறது.

இன்றுகூட 25-30 தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவ்வப்போது பிடிபட்ட மீனவர்கள விடுவிக்கப்படுகிறார்கள். அதே சமயம் புதிதாக மீனவர்கள் பிடிபடுகிறார்கள்.

கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்ததால் இலங்கையின் கடல் எல்லை இந்தியா நோக்கிப் பல கடல் மைல்கள் நகர்ந்துவிட்டன. இதனால் தமிழக மீனவர்கள் தங்கள் பாரம்பரிய கடலில் மீன்பிடிக்க வரும்போது கடல்எல்லையைத் தாண்டி விடுகிறார்கள். அப்படித் தாண்டும்போது இலங்கைக் கடற்படை அவர்கள் மீது தாக்குதல் நடத்துகிறது. கை கால்களை உடைக்கிறது. வலைகளை அறுத்துப் படகுகளைச் சேதமாகிறது. பிடித்து வைத்திருந்த மீன்களையும் கடலில் வீசுகிறது. மீனவர்களைக் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு போகிறது.

கடந்த ஆண்டு கேரள மாநிலத்தை அடுத்த ஆலம்புல கடற்பகுதியில் நடுக்கடலில் மீன்பித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இத்தாலிய சரக்குக் கப்பல் பாதுகாவலர்கள் துப்பாக்கியால் சுட்டதில் கொல்லத்தைச்சேர்ந்த மீனவர் ஒருவரும் தமிழகம் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். அவர்களை கடற்கொள்ளையர் என நினைத்து தவறாக சுட்டுவிட்டதாக இத்தாலிய சரக்குக் கப்பலில் வந்தவர்கள கூறினார்கள்.

இதனை அடுத்து இந்திய கடலோர காவல்படையினர் இத்தாலிய சரக்குக் கப்பலை கொச்சி துறைமுகத்துக்குக் கொண்டு சென்று விசாரணை நடத்தினர். இதின் எதிரொலியாக கேரளா அரசு தமிழ்நாட்டு அரசைப் போல் கடிதம் மட்டுமே எழுதாமல் உடனே செயலில் இறங்கி இத்தாலியர்கள் இருவரையும் கைது செய்தது. விசாரணையின் பின்னர் திருவனந்தபுரம் சிறைச்சாலையில் சந்தேக நபர்கள அடைக்கப்பட்டனர்.

தமிழகத்தைப்பொறுத்தளவில் இதுவரை 578 பேர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய இலங்கை கடற்படையினரில் ஒருவர்கூட கைதுசெய்யப்படவில்லை. ஒருமுறை இலங்கை கடற்படை தமிழக மண்ணில் இறங்கி மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியது. அப்போது யாரும் கைது செய்யப் படவில்லை. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டு என்ற கதைதான்.

**கச்சதீவுச் சிக்கலின் அடிப்படை என்ன?**

நெடுந்தீவுக்கு தெற்கே 9 மைல் தொலைவிலும் இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே 12 மைல் தொலைவிலும் உள்ள பாக்குநீரிணையில் கச்சதீவு அமைந்துள்ளது. தீவின் பரப்பளவு 285 ஏக்கர். கிழக்கு மேற்காக ஒருமைல் தூரமும் வடக்குத் தெற்காக அரைமைல் தூரமும் கொண்டதாக இருந்தாலும் அதனை அண்டிய கடற்பகுதி மீன்வளம் நிறைந்ததாக உள்ளது. ஓய்வெடுப்பதற்கும் வலைகளை உலர வைப்பதற்கும் பிடிபட்ட மீன்களை இன வாரியாக வகைப்படுத்துவதற்கும் மக்கள் வசிக்காத வறண்ட கச்சதீவைப் பரம்பரை பரம்பரையாக தமிழக மீனவர்கள பயன்படுத்தி வந்தனர். மீனவர்களின் புண்ணிய புரவலராக கருதப்படும் புனித அந்தோனியாரது கத்தோலிக்க தேவாலயம் இந்தத் தீவில்தான் உள்ளது.

20 நூற்றாண்டில் இராமநாதபுரம் சமஸ்தானத்தைச்சேர்ந்த சீனிகுப்பன் படையாச்சி என்பவர் அங்கு அந்தோனியார் தேவாலயத்தைக் கட்டினார். இன்றும் அத்தீவில் இருக்கும் ஒரே கட்டடம் அதுதான். இராமேஸ்வரமும் அதை ஒட்டிய கடல்பகுதியும் சிறு தீவுகளும் இந்தியா சுதந்திரம் பெற்ற 1947ஆம் ஆண்டு வரைஆங்கிலேயரின் நேரடி நிர்வாகப் பகுதியாக இல்லாமல் சேதுபதி மன்னர்கள் ஆண்டுவந்த இராமநாதபுரம் சமஸ்தானத்திடமே இருந்தன. சுதந்திரத்துக்குப் பின் இந்தியாவிலிருந்த மற்ற சமஸ்தானங்களையும் போல் இராமநாதபுரம் சமஸ்தானம் சட்டபூர்வமாக இந்தியாவுடன் இணைந்தது. கச்சதீவு இராமநாதபுரம் சமஸ்தானத்தை ஆண்ட சேதுபதி மன்னர்களின் பரம்பரை பரம்பரைச் சொத்து என்பதை எண்பிக்க ஏராளமான சான்றுகள் உள்ளன. அவை மதுரையிலுள்ள ஆவண காப்பகத்தில் பத்திரமாக பாதுகாக்கப்பட்ட வருகின்றன.



இராமநாதபுரம் மன்னருக்கும் அன்றைய இந்திய அரசின் உள்துறை செயலருக்கும் இடையே 1913 இல் குத்தகை ஆவணம் ஒன்று கையெழுத்தாகியது. அந்த ஆவணத்தின் இறுதியில் சமஸ்தானத்தில் சங்கு கிடைக்கும் பட்டியல் ஒன்று தரப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் கச்சதீவின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் சொத்தாக கச்சதீவு இருந்தது என்பதும் அதை ஆங்கிலேய அரசு அங்கீகரித்துள்ளது என்பதும் தெளிவாக எண்பிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 21, 1921 இல் இலங்கைத் தலைநகராகிய கொழும்பில் மீன்பிடி எல்லையை வகுக்க மாநாடு ஒன்று நடந்தது. இலங்கையின் சார்பாக கலந்துகொண்ட ஹார்ஸ்பர்க் என்ற அதிகாரி, கச்சதீவுக்கு அப்பால் 3.45 மைல்வரை மேற்கே உள்ள கடல் பகுதியும் உள்ளடங்கும் வகையில் இலங்கையின் எல்லை வகுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினார்.

இந்திய அரசுக் குழுவினர்கச்சதீவு தமக்குச் சொந்தம் என்று இராமநாதபுரம் மன்னர் கூறுவதை மெய்ப்பிக்க வரைபடத்தையும் காட்டினர். நெருக்கடியைத் தவிர்க்க இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் எல்லைக் கோட்டை கச்சதீவுக்கு மேற்கே 3.45 மைல் தொலைவிலேயே தற்காலிகமாக வரையறுத்துக்கொள்ளலாம் என உடன்பாடு செய்து இந்திய குழு அறிக்கை ஒன்றை இந்திய அரசுக்கு அனுப்பியது. பழைய ஆவண விவரங்களையும் ஆங்கில அரசின் நடவடிக்கைகளையும் பார்க்கும் போது ஆங்கிலேயர் ஒரு போதும் கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுக்கவில்லை என்பதும் அவர்கள் தொலை நோக்குப் பார்வையுடன் செயற்பட்டனர் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

நக்கீரன்

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்திசாலியான மருமகள்



ராமதாசர் ஒரு பெரிய வியாபாரி. அவருடைய ஒரே மகன் விஜயன். அந்த ஊரிலே வசித்து வந்த மற்றொரு வியாபாரியின் மகளான சீலவதி மிகவும் அழகாகவும், மிக புத்திசாலியாக இருப்பதாகவும் அறிந்த ராமதாசர் அவளை தன் ஒரே மகனுக்கு மணமுடித்து வைத்தார். இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் நள்ளிரவில் தனது மருமகள் கையில் ஒரு குடத்துடன் வீட்டை விட்டு சத்தமின்றி இரகசியமாக வெளியேறியதையும் வெகு நேரம் கழித்து மீண்டும் திரும்பியதையும் கண்ட ராமதாசர் திடுக்கிட்

**அம்புலிமாமா கதைகள்**

டார். இது போன்ற மர்மமான மருமகள் தனக்குத்தேவையில்லை என்று முடிவு செய்த அவர், மறுநாளே தன் மகனிடம் அவளைப் பிறந்த வீட்டில் விட்டு விடும்படிக் கூறினார்.

தந்தையின் உத்தரவு மகனுக்குப் பிடிக்காததால் அவன் அவளை பிறந்த வீட்டிற்கு அனுப்பவில்லை. இதனால் ராமதாசர் அவளைத் தானே அவள் பிறந்த வீட்டிற்குக் கொண்டுவிட முடிவு செய்தார்.

மறுநாளே சீலவதியை அழைத்துக் கொண்டு ராமதாசர் கிளம்பிவிட்டார். செல்லும் வழியில் ஒரு ஓடையைக் கடக்க வேண்டி வந்தது. அவர் சீலவதியிடம், “செருப்புகளை கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு நட!” என்று உத்தரவிட்டு தானும் அதுபோலவே செய்தார். ஆனால், சீலவதி செருப்புக்காலுடனே ஓடையைக் கடந்தது, ராமதாசருக்கு அதிருப்தியை உண்டாக்கியது.

சிறிது தூரம் சென்ற பிறகு, ஒரு வயல் நன்கு விளைந்திருந்ததைக் கண்ட ராமதாசர், “நிலச்சொந்தக்காரனுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்றார். உடனே சீலவதி “லாபம் கிடத்தால் மட்டும் போதுமா?” வந்த பணம் எதுவும் தங்காமல் பாழாகப் போகிறது! விமரிசனம் செய்தாள். அவள் பேசியபோது ராமதாசருக்குப் பிடிக்கவில்லை.

அவர்கள் மேற்கொண்டு பயணம் செய்து கொண்டே ஒரு நகரத்தின் வழியே சென்றனர். அழகாக இருந்த அந்த நகரத்தைக் கண்ட ராமதாசர், “என்ன அழகான நகரம்” என்றார். உடனே சீலவதி, “அழகாயிருந்து என்ன பயன்? எதிரிகளின்



தாக்குதலுக்குட்பட்டு நாசமாகும்!” என்று கூறினாள்.

சில நேரத்திற்குப் பிறகு, நண்பகல் வேளையில் ஓய்வெடுக்க ராமதாசர்



ஒரு ஆலமரத்தடியில் அமர்ந்தார். சீலவதி மரத்தில் இருந்து சற்றுத் தொலைவில் சென்று அமர்ந்தாள். இதனால் சீலவதியின் மீது வெறுப்பு அதிகரித்தது. அதன் பிறகு ஒரு மாட்டு வண்டியை அமர்த்திக் கொண்டு இருவரும் பயணம் செய்தனர்.

செல்லும் வழியில் தனது நண்பர் வீட்டில் சிறிது நேரம் தங்கிவிட்டு உணவருந்தியபின் ராமதாசர் மாட்டு வண்டியில் படுத்துக் கொண்டார். சீலவதி வண்டியின் நிழலில் அமர்ந்து கொண்டாள். அப்போது வீட்டருகில் இருந்த ஒரு மரத்தில் ஒரு காக்கா “கா...கா” என்று கரைய ஆரம்பித்தது.


சீலவதி அதை நோக்கி, “நீ சொல்வது என் காதில் விழுகிறது. ஆனால் என்ன பிரயோசனம் ? ஒரு முறை தவறு செய்ததால், என் கணவன் வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தது. மறு முறையும் தவறு செய்தால் என்கணவனை நிரந்தரமாக நான் பிரிய வேண்டி வரும்” என்றாள்.

மருமகள் காக்காவுடன் பேசியதைக் கேட்ட ராமதாசர் அளவற்ற வியப்படைந்தார். உடனே வண்டியிலிருந்து வெளிவந்து, மருமகளே! நீ இப்போது கூறியதன் அர்த்தம் என்ன? என்று கேட்டார். என்னவவென்று சொல்வேன், தந்தையே! எனக்குள்ள விசேஷ சக்திகள் எனக்கு துன்பத்தை தான் கொடுக்கின்றன.

எனக்கு மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் மொழி தெரியும்!” என்றாள். தொடர்ந்து, “ஒருநாள் நள்ளிரவு வீட்டை விட்டு நான் தனியே குடத்துடன்சென்றதைப் பார்த்திருப்பீர்கள். அன்று நான் ஏன் அவ்வாறு செய்தேன் தெரியுமா? ஒரு குள்ள நரி அப்போது ஊளையிட்டுக் கொண்டே,” ஆற்றில் ஒரு பெண்ணின் பிணம் மிதக்கிறது.அதன் உடலில் ஏராளமான நகைகள் உள்ளன!” என்று தெரிவித்தது. அதைக் கேட்டவுடன் நான் யாருக்கும் சொல்லாமல் குடத்தை எடுத்துக் கொண்டு ஆற்றிற்குச் சென்றேன். ஆற்றில் நீந்திச் சென்று பிணத்தின் உடலிலிருந்து நகைகளைக் கழற்றி குடத்தில் இட்டு, குடத்தை நம் வீட்டுத் தோட்டத்தில் புதைத்துவைத்து விட்டேன்.

ஆனால், என் செய்கையைத் தவறாகப் புரிந்து கொண்ட நீங்கள் என்னை வீட்டை விட்டே வெளியேற்றி விட்டீர்கள். இப்போது அந்த காக்கா இதோ, இந்த மரத்தினடியில் ஒரு புதையல் இருக்கிறதாம்!” என்று சொல்லி முடித்தாள். உடனே ராமதாசர் மரத்தினடியில் தோண்ட, அங்கு புதையல் கிடைத்தது.

உடனே அவர், “மருமகளே! உன்னைத் தவறாகப் புரிந்து கொண்டேன். வா, நம் வீட்டிற்குச் செல்வோம்!” என்று கூறி சீலவதியை



அழைத்துக் கொண்டு தன் வீடு திரும்பலானார். திரும்பும் வழியில் அதே ஆலமரம் தென்பட்டவுடன், அவர் அவளை நோக்கி, “சீலவதி! வரும்போது நான் இதன் அடியில் ஓய்வெடுக்க , நீ விலகி அமர்ந்ததன் காரணம் என்ன?” என்று வினவினார்.

“அப்பா! மரத்திடியிலுள்ள பொந்துகளில் பாம்புகள் இருக்கலாம். தவிர மரத்தில் அமரும் பறவைகள் நம் மீது எச்சமிடும்” என்றாள். மேற்கொண்டு பயணம் செய்கையில், அதே நகரம் மீண்டும் வந்தது. உடனே சீலவதி, “பாதுகாப்பில்லாத இந்த நகரத்தின் மீது எதிரிகள் படையெடுத்தால், இதை அவர்கள் எளிதாகக் கைப்பற்றி விடுவார்” என்றாள்.

பிறகு நன்கு விளைந்த வயல் தென்பட்டது. அவள் அதைப் பார்த்ததும், “இந்த நிலச் சொந்தக்காரன் விளைச்சலை விற்று அதை நல்வழிக்காகப் பயன்படுத்தினால் தான் அவனுக்கு லாபம் கிடைக்கும்” என்று விளக்கம் கொடுத்தாள்.

மேற்கொண்டு திரும்பும் வழியில் அந்த ஆறு குறுக்கிட்டது. ஆற்றைக் கண்டதும் சீலவதி, “ஆற்றில் சரளைகள் கற்கள் உள்ளன. தவிர ஆற்றில் சிறிய ஜீவராசிகள் உள்ளன. ஆகையால் தண்ணீரில் நடக்கும் போது கண்டிப்பாக செருப்பு அணியவேண்டும்” என்று விளக்கம் தந்தாள்.

வீட்டை அடைந்தவுடன் முதல் காரியமாக, பணப்பெட்டியின் சாவியை அவளிடம் கொடுத்ததுடன், நிர்வாகப் பொறுப்பையும் அவளிடமே கொடுத்து விட்டார்.

அந்த சமயம், ராஜா ஒரு புது மந்திரியை நியமிக்க விரும்பினார். அதற்காக நாட்டிலுள்ள பலரை தேர்வு செய்ய அழைத்தார். சீலவதியின் கணவன் விஜயனும் சீலவதியுடன் தலைநகரை அடைந்து மன்னனின் தர்மசாலையில் தங்கினான். அன்று தேர்விற்கு வந்தவர்களிடம் “ராஜா, மன்னனை காலால் உதைப்பவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?” என்று கேட்டார். ஒருவன், “அவனை நன்கு சவுக்காலடிக்க வேண்டும்” என்று ஆளுக்கு ஆள் தங்களுக்குத் தோன்றியதெல்லாம் கூறிக் கொண்டிருந்தனர்.

உடனே விஜயன் ஓடோடி வந்து, தன் மனைவி சீலவதியிடம் அதற்கு சரியான பதில் என்ன என்று கேட்டான். அதற்கு சீலவதி, “ராஜாவை யாராவது காலால் உதைக்க முடியுமா? அவ்வாறு யாராவது செய்தார்கள் என்றால் அது அவருடைய குழந்தையாக இருக்க வேண்டும்!” என்று கூறினாள். உடனே, விஜயன் மன்னரிடம் சென்று, “மகாராஜா! காலால் உதைத்தவர் மீது அதிக அன்பு செலுத்த வேண்டும்!” என்றான். இதைக் கேட்ட ராஜா அவனையே மந்திரியாகத் தேர்வு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவிமடுப்பு உபகரணங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன

## புலனாய்வு பிரிவினர் தகவல்

கைடயக்கத் தொலைபேசிகள், வீடு மற்றும் அலுவலங்கங்களில் பயன்படுத்தப்படும் வயர் இணைப்பு தொலைபேசிகளின் உரையாடல்களை இரகசியமான முறையில் செவிமடுப்பதற்கான உபகரணங்கள் கணனி பாகங்கள் என்ற போர்வையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சில இலங்கை தூதுவர்களின் தொலைபேசிகள் வெளிநாட்டு புலனாய்வு சேவைகளினால் செவிமடுக்கப்படுவதாக கிடைத்த தகவல்களை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த உபகரணங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ள விடயம் தெரியவந்துள்ளது.

ரொவின் பக் என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தொலைபேசி உரையாடல்களைச் செவிமடுக்கும் நடவடிக்கைகள் வெளிநாடுகளில் செயற்படுத்தப்படுகின்றது. ஒரு நாட்டின் புலனாய்வுச் சேவையின் வெளிநாட்டு விசாரணை சட்டத்தின் கீழ் மாத்திரமே இதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தப்படாத நிலையில் அதன் பற்றரி சூடேறுதல், தொலைபேசி அடிக்கடி வெளிச்சத்தை வெளியிடுதல், பீப் என்ற சத்தம் ஏற்படுத்தல் என்பவற்றின் மூலம் தொலைபேசி ஒன்று பிரிதொரு தரப்பினரால் செவி மடுக்கப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள முடியும் என இலங்கை புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-2)

# அணு தொழில்நுட்பம் குறித்து ரஷ்யாவுடன் உடன்படிக்கை

(கொழும்பு)

அணுசக்தி தொழில்நுட்பம் தொடர்பில் இலங்கை ரஷ்யாவுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டுள்ளது.

அணுசக்தி தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய காரணிகளின் அடிப்படையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ரஷ்ய அணுசக்தி முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், முன்னாள் ஜனாதிபதி சர்ஜீதிரியான் கோவிற்கும் இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் விஜேவர்தனவிற்கும் இடையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அணுசக்தி ஆய்வு, அணுக்கழிவு முகாமைத்துவம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு எதிர்காலத்தில் அணுசக்தியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என இலங்கை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ-2)

# பேருந்து கட்டண உயர்வு குறித்து உறுதியான முடிபை அறிவியுங்கள்

(கொழும்பு)

பேருந்து கட்டண உயர்வு குறித்து உறுதியான முடிபை அறிவிக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரியுள்ளது.

பேருந்து கட்டண உயர்வு குறித்து நிதி அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் ஆனால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதனை கண்டுகொள்ளாதிருப் பதாகவும் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் தமக்கு முன்வைக்கப்பட்ட அறிக்கைக்கு அமைய குறித்த அமைச்சுக்கு உரிய பதில் அளிக்கப்பட்டுள்ளதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

பேருந்து கட்டண உயர்வு குறித்த தற்போதைய நிலையை அறிய தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி.ரத்நாயக்கவை நாம் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை. (அ-2)

# அடையாள அட்டை பெறுவதற்கு அதிகமானோர் விண்ணப்பம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக வடமாகாணத்தி லிருந்து 11 ஆயிரத்து 647 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

வடமாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் முன்னெடுக்கப் பட்ட தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவையின் போதே இத்தனை விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதாக பவ்ரல் அமைப் பு தெரிவித்தது.

அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அடையாள அட்டை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஊடாக வடக்கில் அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவையை பவ்ரல் அமைப்பு மேற்கொண்டு வருகின்றது. கடந்த இரண்டு மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடமாடும் சேவையின் போது 11 ஆயிரத்து 647 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று அவ்வமைப்பு குறிப்பிட்டது.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 272 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 786 பேரும் யாழ்.மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி வரை 6 ஆயிரத்து 589 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் விண்ணப்பித்த 786பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு விட்டதாக பவ்ரல் அமைப்பு மேலும் குறிப்பிட்டது. (அ-2)




❖1054- சுப்பர்நோவா ஒன்று சீனர்களாலும், அரபுக்களாலும் அவதானிக்கப்பட்டது.

❖1634 - நியூ பிரான்சில் ட்ரோய்-ரிவியேரெஸ் நகரம் உருவாக்கப்பட்டது. இது பின்னர் கியூபெக் நகரமானது.

❖1776 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து ஐக்கிய அமெரிக்கா விடுதலையை அறிவித்தது.

❖1803 -லூசியானா விலைக்கு வாங்கப்பட்ட செய்தி அமெரிக்க மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

❖1810- பிரெஞ்சுப் படைகள் ஆம்ஸ்டர்டாம் நகரைப் பிடித்தனர்.

❖1865 - ஆலிஸின் அற்புத உலகம் வெளியிடப்பட்டது.

❖1879 - ஆங்கிலோ-சூலு போர் உலுண்டி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரின் பின்னர் முடிவுக்கு வந்தது.

❖1918 - ரஷ்யாவின் சார் மன்னன் இரண்டாம் நிக்கலாஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் போல்ஷெவிக்கினரால் கொல்லப்பட்டனர் (யூலியின் நாட்காட்டி).

❖1941 - நாசி ஜேர்மனியினரால் போலந்தில் "லூவோவ்" என்னும் இடத்தில் அறிவியலாளர்களும் எழுத்தாளர்களுமாக 45 பேர் உயிரிழந்தனர்.

❖1946 -381 ஆண்டு குடியேற்றவாதிகளின் ஆட்சியின் பின்னர் பிலிப்பைன்ஸ் ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து விடுதலை அடைந்தது.

❖1976-உகண்டாவில் பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஏர் பிரான்ஸ் விமானத்தில் இருந்த அனைவரையும் இஸ்ரேலிய கொமாண்டோ படையினர் விடுவித்தனர்.

❖1988 - வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் முதல் தமிழ் மாநாடு பென்சில்வேனியாவில் இடம்பெற்றது.

❖1997 - நாசாவின் பாத்ஃபைண்டர் விண்கலம் செவ்வாய்க் கோளில் இறங்கியது.

❖ 2006-டிஸ்கவரி விண்ணோடம் 18:37:55 மணிக்கு விண்ணுக்கு ஏவப்படடது.

### பிறப்புகள்

❖1807 - கரிபால்டி, நவீன இத்தாலியின் தந்தை (இ. 1882)

❖1872 - கால்வின் கூலிட்ஜ், ஐக்கிய அமெரிக்காவின் 30ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1933)

❖1898 - குல்சாரிலால் நந்தா, இந்தியாவின் 2 ஆவது பிரதமர் (இ. 1998)

### இறப்புகள்

❖1826 - ஜோன் ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் 2ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1735)

❖1826 -தோமஸ் ஜெவர்சன், ஐக்கிய அமெரிக்காவின் 3 ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1743)

❖1831 - ஜேம்ஸ் மன்ரோ, ஐக்கிய அமெரிக்காவின் 5ஆவது குடியரசுத் தலைவர்(பி. 1758)

❖1902 - சுவாமி விவேகானந்தர், இந்தியாவின் சமயத் தலைவர் (பி. 1863)

**❖1934 - மேரி கியூரி, நோபல் பரிசு பெற்ற அறிவியலாளர் (பி. 1867)**

### மேரி கியூரி



புகழ்பெற்ற போலந்து மற்றும் பிரெஞ்சு வேதியியல் அறிஞரான இவர் போலந்தில் வார்சா எனும் இடத்தில் 1867ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி பிறந்தார். பின்னர் பிரான்சில் வசித்தார். இவர் வேதியியல் மற்றும் இயற்பியலுக்காக நோபல் பரிசுகளை முறையே 1903 ஆம், 1911 ஆம் ஆண்டுகளில் பெற்றார். இதன்மூலம் இரண்டு நோபல் பரிசுகளைப் பெற்ற முதல் நபர் என்ற புகழைப் பெற்றார். தனது ஆய்வுகளின்மூலம் ரேடியம், பொலோனியம் போன்ற கதிர்வீச்சு மூலகங்களைக் கண்டு பிடித்தார். அத்துடன் பாரிஸ் பல்கலைக்கழகத்தின் முதலாவது பெண் பேராசிரியரும் இவரேயாவார்.

தான் முதன்முதலாக கண்டுபிடித்த தனிமத்திற்கு தனது தாய்நாட்டை கௌரவிக்கும் வகையில் போலோனியம் என்று பெயரிட்டார்.

1895இல் ரோஎன்ட்ஜென் எக்ஸ்-கதிர்களை கண்டுபிடித்தார். மேரி ஒரு ஆய்வுக் கட்டுரைக்காக எக்ஸ்-ரே கதிர்களை ஆராய்ந்ததோடு ஒரு புத்தாக்கமான திறமையை பயன்படுத்தி யுரேனியத்தையும் ஆராய்ந்தார். இதன்மூலம் யுரேனியக்கதிர்கள் சுற்றியுள்ள காற்றில் மின்சாரத்தை உண்டாக்குகின்றன என்று கண்டார். இதைப் பயன்படுத்தி யுரேனியத்தின் அளவைப் பொறுத்தே அதன் கதிர் வெளிப்பாடு இருப்பதாக இவர் கண்டறிந்தார்.

மேலும் இவர் ஆய்வுகளின் மூலம் 1896 இல் கதிர் வீச்சு தொடர்பான ஆராய்ச்சிகளை ஆரம்பித்தார். 1898 இல் அதிகார பூர்வமாக ரேடியம், பொலோனியம் போன்ற கதிர்வீச்சு மூலகங்களைக் கண்டுபிடித்ததை அறிவித்தார். தொடர்ந்து 1914இல் முதலாம் உலகப் போரின் போது ஆம்புலன்ஸ் வண்டிகளில் எக்ஸ் கதிர் கருவிகளைப்பொருத்த உதவி செய்தார்.

இவ்வாறு வேதியியல் மற்றும் இயற்பியலில் பல கண்டுபிடிப்புக்களைச் செய்த மேரிகியூரி பச்சியில் உள்ள சன்செல்லிமொஸ் சானடோரியத்தில் ஆண்டாண்டு காலமாக கதிரியக்க வெளிப்பாடோடு பழகி வந்ததால் அப்பிலாச்டிக் இரத்த சோகை நோயினால் பீடிக்கப்பட்டு 1934ஆம் ஆண்டு ஜூலைமாதம் 4ஆம் திகதி தன் இன்னுயிரை நீத்தார்.

1890 ஆம் ஆண்டுக்குரிய ஆவணப் பொருட்கள் சாதாரணமாக கையாள முடியாதபடி ஆபத்தானவையாக கருதப்படுகின்றன. ஏனெனில் அவைகள் கதிரியக்க வெளிப்பாடுகளை கொண்டிருக்கின்றன. அவரது சமையல் புத்தகம் கூட அதிக கதிரியக்க வெளிப்பாடு கொண்டதாகும் என குறிப்பிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியப் படைப்பாளிகள், என்றும் போராடும் மக்கள் பக்கம் இருக்கவேண்டும்



தமிழகத்தின் தமிழ்க் கலை இலக்கியப் பேரவை சார்பில் தமிழ்த் தேசியப் பற்றாளரும், அமரத்துவம் அடைந்துவிட்டவருமான, இயக்குநர் மணிவண்ணனது நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வு, அண்மையில் சென்னை, வடபழனியிலுள்ள திரைப்பட இசைக் கலைஞர்கள் சங்க அரங்கத்தில், தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சித் தலைவர் பெ.மணியரசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈழத்தின் கலைஞர் காசி ஆனந்தன், ஓவியர் புகழேந்தி உட்பட மணிவண்ணனுக்கு நெருக்கமான பல திரைத்துறை சார்ந்தவர்களும் பங்குகொண்டனர்.

இந்நிகழ்வில் அமரர் மணிவண்ணனது வாழ்க்கைக் குறிப்புகளை உள்ளடக்கி கவிஞர் கவிபாஸ்கர் எழுதிய குறுநூலும் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் தலைமையுரையாற்றிய பெ.மணியரசனது உரை அமரர் மணிவண்ணனை நினைவுகூர்வதாக மட்டுமல்லாமல், கலைத்துறையின் பயணம் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றிய பொதுப்படையான சிறப்பம்சங்களைக் கூறுவதாகவும் அமைந்திருந்தது. அவ்வுரையின் பகுதி இங்கு தரப்படுகிறது.

தமிழ்த் தேசியப் பற்றாளரும் இயக்குநருமான அமரர் மணிவண்ணனது இறப்பைப் பற்றி பேசும் துர்ப்பாக்கிய நிலையில் இந்நிகழ்வு நடைபெறுகிறது என தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு உரையாற்றிய அவர், மணிவண்ணனது கலைப்பயணம் போராடும் மக்கள் பக்கம் இருந்தது என்பதையும் பதிவு செய்திருந்தார்.

கலைத்துறை என்பது அரசியலுக்கு அப்பாற்பட்ட துறை என்று சிலர் குறிப்பிடுகின்றனர். அது உண்மையல்ல. பணம் சம்பாதித்துக் குவிப்பதே தமது இலட்சியம் என்று செயல்படுகின்ற சிலர், தான் சார்ந்துள்ள இனத்துக்கு, தேசத்துக்கு எதையும் செய்ய விரும்பாத நிலையில், அந்த போலித்தனத்தை மறைப்பதற்காக, கலைத்துறையில் அரசியல் கூடாது என்று, பேசுகின்றனர். அந்த போலித்தனத்தின் திரை கிழித்தவர் இயக்குநர் மணிவண்ணன் ஆவார்.

கலைப்படைப்பாளர்கள்தான், ஒடுக்குமுறைக்கெதிராக, கொடுமைகளுக்கு எதிராக கொதித்து எழக்கூடிய சமூகப்பணியை முன்னின்று செய்ய வேண்டியவர்கள். புகழ்பெற்ற கலைஞரான சார்லி சாப்ளின், ஹிட்லரின் பாசிசத்தை எதிர்த்து, அதை அம்பலப்படுத்தி த கிரேட் டிக்டேட்டர் என்றொரு படத்தை தந்தார்; முதலாளிய தொழில் வளர்ச்சி, மனிதர்களை இயந்திரமயமாக்குகின்றது என்பதை அம்பலப் படுத்தி த மார்டன் டைம்ஸ் என்றொரு கலைப்படைப்பைத் தந்தார். நடுநிலை என்று நாடாக மாடாமல், பாசிச எதிர்ப்பின் பக்கம் உறுதியாக நின்றார் சார்லி சாப்ளின்.

பிரிட்டனிலிருந்து ஸ்கொட்லாந்து நாடு தனியாகப் பிரிய, 2014 ஆம் ஆண்டு பொது வாக்கெடுப்பு நடைபெற இருக்கிறது. அந்த வாக்கெடுப்பு குறித்த செய்தி வரும்போதெல்லாம், புகழ்பெற்ற ஜேம்ஸ் பாண்ட் பட நடிகர் சீன் கானரி, அந்த வாக்கெடுப்பில் பங்கெடுக்க வருவாரா என்று செய்தி வெளியிடுவார்கள். ஸ்கொட்லாந்து நாட்டுக்காரரான சீன் கானரி, தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார். ஸ்கொட்லாந்து



சார்லி சாப்ளின்

நாடு எப்போது விடுதலை பெற்றுத் தனிநாடாக மலர்கிறதோ அப்போதுதான் தாய்நாடு திரும்புவேன் என்று அறிவிக்கும் அவர், அமெரிக்காவில் இருக்கிறார். இப்படி உலகெங்கும் கலைப் படைப்பாளிகள் சமூக உணர்வோடு, தான் சார்ந்துள்ள தேசத்தின், இனத்தின் நலனுக்காக குரல் கொடுக்கிறார்கள். ஆனால், தமிழ் நாட்டில் இதுபோன்ற நிலை இன்னும் பெரிய அளவில் வரவில்லை. தமிழ் நாட்டில் கொள்கை, இலட்சியம் எதுவுமில்லாமல், திரைத்துறையில் பெற்ற பிரபலத்தை வைத்து யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம். தேர்தல்களில் பங்கெடுக்கலாம். ஆனால், அவர்கள், இலட்சிய அரசியல் மட்டும் செய்யக்கூடாது என்பர். இயக்குநர் மணிவண்ணன், மக்களுக்கான இலட்சியத்தை முன் வைத்து நின்றவர். மனித சமத்துவம், ஒடுக்குமுறைக்கெதிரான சமூக அமைப்பு ஆகிய இலட்சியங்களுக்காக நம்மோடு நின்றவர். இந்திய ஏகாதிபத்தியத்தின் காலனியாக, தமிழ்நாடு அடிமைப்பட்டுக் கிடக்கிறது என அவர், மனம் கொதித்தவர். சிங்கள இனவெறியர்கள் தமிழீழத்தை ஆக்கிரமித்து, இனப்படுகொலை செய்ததை எதிர்த்து குமுறியவர் அவர்.


ஒருவன், முற்போக்கானவன் என்றால், அவன் சார்ந்துள்ள இனம், தேசம் அடிமைப்பட்டுக் கிடப்பதை எதிர்த்து அவன், குரல் கொடுக்க வேண்டும். அவரவர் சார்ந்துள்ள இனத்தின் விடுதலையை எவர் ஆதரிக்கிறாரோ, அதுவே, அவரது சமூக உணர்வின் அடிப்படையாகும்; முற்போக்கானவர் என்பதற்கான முதற்படியாகும்.

அதன் வழியாகத்தான் சமூக சமத்துவத்திற்கான மார்க்சியக் கருத்தை ஏற்க முடியும். மார்க்சியம், பெரியாரியம் எதுவானாலும் தமிழ் நாட்டின் இன்றைய தேவைக்கு- அவற்றிலிருந்து எவற்றை எடுத்துக் கொள்ளலாமோ அவற்றை மட்டும்தான், எடுத்துக் கொள்ளவேண்டும். . மக்களுக்காகத் தத்துவமே தவிர, தத்துவத்திற்காக மக்கள் அல்ல.

தமிழீழம் மட்டுமன்றி, இந்திய ஏகாதிபத்தியத்திடமிருந்து தமிழ் நாடு விடுதலையடைவதையும் இயக்குநர் மணிவண்ணன் ஆதரித்தார். அதற்காக தம்முடன் இணைந்தும் இயங்கினார்.

மணிவண்ணனது இயக்கத்தில் வெளியான இனி ஒரு சுதந்திரம் என்ற படம் தன்னை மிகவும் கவர்ந்த படைப்பு என்றும், மணிவண்ணன் தனது குடும்பத்திலும் தனது கருத்துக்கள் பற்றி பேசிக்கொள்ளும் ஒருவர் என்றும் நிகழ்வின் தலைவர் மணியரசன் கூறியிருக்கிறார்.

2008 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக இயக்குநர் சீமானும், கொளத்தூர் மணியும் தானும் கைது செய்யப்பட்டிருந்தபோது, பிணை மறுக்கப்பட்டிருந்த நிலையில் தம்மை அடிக்கடி கோவை சிறைக்கு வந்து பார்த்துக்கொண்ட அமரர் மணிவண்ணன், தம்மை பிணையில் கொண்டு வர அரும்பாடுபட்டார்; அதன் பிறகு காவல்துறையானது, இயக்குநர் சீமானை மட்டும், தேசியப் பாதுகாப்புச் சட்டத்தினடிப்படையில் கைது செய்து சிறையிலடைத்த போது, அதனை எதிர்த்து தாங்கள் இயக்கம் நடத்திய போது, மணிவண்ணன் நிதியுதவி செய்ததோடு, தங்களது தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம் என்ற இதழின் வளர்ச்சி



ஸீன் கானரி (ஜேம்ஸ் பொண்ட்)

யிலும் அக்கறையுடன் பங்கெடுத்து அவ்வப்போது நிதியுதவி செய்தவர் மணிவண்ணன், எனவும் . நிகழ்வின் தலைவர் குறிப்பிட்டார்.

உண்மையான கம்யூனிஸ்டுகள், தேச விடுதலையின் பக்கம், இன விடுதலையின் பக்கம் தான், நிற்க வேண்டும். ஆனால், இங்கிருப்பவர்கள் அவ்வாறு கவனம் செலுத்துவதில்லை. பெயரில் மட்டும் கம்யூனிசத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கவலைப்படுபவர் அமரர் மணிவண்ணன் என்று, நினைவுகூர்ந்த நிகழ்வின் தலைவர் மணியரசன், 1970களில் தானும் சி.பி.எம். இயக்கத்தில் அங்கமாக இருந்தபோது, இதே வீதிகளில் **வியட்நாம் யுத்தம் எங்கள் யுத்தம், வியட்நாம் இரத்தம் எங்கள் இரத்தம்** என முழக்கம் எழுப்பினோம். அது தவறில்லை. வங்க தேசத்தை விடுவிக்க இந்தியா தனது இராணுவம் கொண்டு போரிட்ட போது, அதை அவர்கள் வரவேற்றனர்; அது தவறில்லை. ஆனால், தமிழீழ விடுதலை என்று வரும்போது, இன்னொரு நாடான இலங்கையில் நடக்கும் உள்நாடடுப் பிரச்சினைக்கு நாம் போராடலாமா என்று கேட்கின்றனர். **ஈழயுத்தம் எங்கள் யுத்தம் ஈழ இரத்தம் எங்கள் இரத்தம்** என்று நாம் முழக்கமிட்டால் அந்த இடதுசாரிகளின் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றுவது போல் அலறுகிறார்கள்.

புரட்சியாளர் லெனின், ஒவ்வொரு கருத்துக்குப் பின்னாலும் ஒரு வர்க்கத்தின் நலன் இருக்கிறது என்றார். பின்னாளில் மாவோ, ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னாலும் ஒரு வர்க்கத்தின் முத்திரை இருக்கிறது என்று சொன்னார். அதை இந்தியச் சூழலில் பாரக்கக் கூடியதாக இருக்கிறது. இங்கு வர்ணாசிரம தர்ம முத்திரை இருக்கிறது என்று புரிந்து கொள்ளலாம். கம்யூனிஸ்ட்டுகள் என்று சொல்லிக்கொண்டு இங்கு இன விடுதலையை எதிர்த்து, இனத் துரோகம் புரிந்துகொண்டுள்ளனர்.

கர்நாடகத்தில் ஒவ்வொரு முறையும் புதிய முல்வர்கள், ஆட்சிக்கு வரும்பொழுதெல்லாம், அங்குள்ள கலைப் படைப்பாளிகளை, கன்னட மொழி அறிஞர்களைச் சந்தித்து ஆசி பெறுகின்றனர். பொதுவான கலைப் படைப்பாளிகளாக அங்கு பலர் இன உணர்வுடன் இருக்கின்றனர். தமிழகத்தில் அவ்வாறான நிலைமை இல்லை. அப்படியொரு பொதுவான தமிழ் உணர்வுமிக்க படைப்பாளிகளை நாம் உருவாக்க வேண்டும். படைப்பாளிகள், சரியை சரி என்றும் தவறை தவறென்றும் எதற்கும் அஞ்சாமல் சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழ்த் திரைத்துறையில் தமிழ் உணர்வுடன் செயற்படுபவர்கள் மிகவும் குறைவு. ஆனால், இயக்குநர் மணி வண்ணனோ முன் சொன்ன ம்ன்னோடிகளில் ஒருவர்.

இயக்குநர் வி.சேகர் குறிப்பிட்டதைப் போல, திரைத்துறையிலுள்ள உணர்வாளர்களுக்கும், தமிழ்த் தேசிய இன அமைப்புகளுக்கும் ஓர் உறுதியான தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அது, இன விடுதலைக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் பயன்படும்.

இயக்குநர் மணிவண்ணனது இழப்பு தமிழ்த் திரைத்துறைக்கு மட்டுமன்றி தமிழ்த் தேசியத்திற்கும் பேரிழப்பாகும் என்று தனது அஞ்சலி உரையில், குறிப்பிட்டுள்ளார் தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சித் தலைவர் மணியரசன்.

தொகுப்பு: சாருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் பாவனையாளர்களே மின்கட்டணத்தை குறைப்பது எப்படி?





1.இழை மின்குமிழ் வீடுகளில் பயன்படுத்தப்படுகின்ற மின்சார பொருட்களில் இழை மின்குமிழிலேயே அதிகளவு (80%) மின்சக்தி வெப்பமாக வீணாக விரயமாக்கப்படுகின்றது. 20% மின் சக்திமட்டுமே ஒளியாக மாற்றப்படுகின்றது. CFL இவ்வகை மின்குமிழ்களில் 80% -90% வரை மின்சக்தியானது ஒளியாக மாற்றப்படுகின்றது. 100W இழை மின்குமிழிற்குப் பதிலாக 20W CFL மின்குமிழைப் பயன்படுத்தி ஒரேயளவு ஒளியைப் பெறலாம்.

2.Led :- இவ்வகை மின்குமிழ்களில் 90%மேற்பட்ட மின்சக்தியானது ஒளியாக மாற்றப்படுகின்றது.

குறிப்பு:- 100W இழை மின்குமிழிற்குப் பதிலாக 10W LED மின் குமிழை பயன்படுத்தலாம். இழை மின்குமிழ் பயன்படுத்துவதை முற்றாக நிறுத்தி CFL, Led மின்குமிழை பயன்படுத்தி அதிகளவு மின்சார கட்டணத்தைக் குறைக்கலாம்

## நாளொன்றுக்கு இழை மின்குமிழ் CFL, பயன்படுத்துவதால் மாதத்தில் செலவாகும் மின்சக்தி விபரம்.

| | 1மணி | 2மணி | 3மணி | 4மணி | 12மணி |
|---|---|---|---|---|---|
| 25w | 0.75 | 1.5 | 2.25 | 3 | 9 |
| 40w | 1.2 | 2.4 | 3.6 | 4.8 | 14.48 |
| 60w | 1.8 | 3.6 | 5.4 | 7.2 | 2.16 |
| 75w | 2.5 | 4.5 | 6.75 | 9 | 2.7 |
| 100w | 3 | 6 | 9 | 12 | 3.6 |

| | 1மணி | 2மணி | 3மணி | 4மணி | 12மணி |
|---|---|---|---|---|---|
| 5w | 0.15 | 0.30 | 0.45 | 0.6 | 1.8 |
| 8w | 0.24 | 0.48 | 0.72 | 0.76 | 2.32 |
| 12w | 0.36 | 0.72 | 1.08 | 1.44 | 4.32 |
| 15w | 0.45 | 0.95 | 1.35 | 1.80 | 5.4 |
| 20w | 0.6 | 1.2 | 1.8 | 2.4 | 7.2 |



3. ரியூப்லைற்

ரியூப் லைற்றுக்களில் ELECRIC CHALK இதற்குப்பதிலாக Electronic Chalk பயன்படுத்துவதன் மூலம் அதில் செலவாகும் மின்சக்தியில் 40% சேமிக்கலாம். உ+ம் அலுவலகத்தில் நாளொன்றிற்கு 10 மணித்தியாலம் தொழிற்படுகின்ற ரியூப் லைற்றிக்கு Electric CHalk பயன்படுத்தினால் 15 யூனிற் செலவாகும். இதற்கு பதிலாக Electronic Chalk பயன்படுத்துவதால் 9 யூனிற் செலவாகும். இதனால் 6 யூனிற்றுக்கான மின்சார கட்டணத்தை குறைக்கலாம்.

ரியூப் லைற்றிலும் பார்க்க LED ரியூப்லைற்றில் 1/3 மடங்கு மின்சக்தியில் தொழிற்படக்கூடியனவாகும்.



4. குளிர்சாதனப்பெட்டி

வீடுகளில் குளிர்சாதனபெட்டிகளிலேயே அதிகளவு மின்சக்தி செலவாகின்றது. இதில் 40 யூனிற் முதல் 60 யூனிற் வரை செலவாகின்றது. இதனைக் குறைப்பதற்கு

a) தேவையில்லாத நேரங்களில் நிறுத்தி வைக்கலாம்.

b) நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் வைப்பதன் மூலம் 10% மின்சார கட்டணத்தை சேமிக்கலாம்.

c) மின் வலுக்குறைவான குளிர்சாதனத்தை பயன்படுத்தலாம்.



5. தொலைக்காட்சி

1) இதில் CRT Tv களிலும் பார்க்க LED Tv கள் 5 மடங்கு குறைவான மின்சக்தியில் தொழிற்படக்கூடியனவாகும். புதிதாக வாங்கும்போது LED Tv கள் வாங்கி அதிகளவு மின்சார கட்டணத்தை குறைக்கலாம்.

2) Tv கள் Standby இல் விடும்போது Tv தொழிற்படாவிட்டாலும் அதற்கான மின்சாரத்தில் 10%- 20% வரை மின்சாரம் செலவாகியவண்ணமே இருக்கும். Tv off செய்து பயன்படுத்துவதன் மூலம் மின்சார கட்டணத்தை குறைக்கலாம்.

வீடொன்றில் பயன்படுத்தப்படுகின்ற மின் இலத்திரனியல் உபகரணங்களும்
அவற்றில் மாதாந்தம் செலவாகும் மின்சக்தியின் அளவும்

| | | |
|---|---|---|
| இழை மின்குமிழ் | 40 Unit தொடக்கம் | 80 Unit வரை |
| CFL மின்குமிழ் | 08 Unit தொடக்கம் | 16 Unit வரை |
| மின்குமிழ்(LED ) | 04 Unit தொடக்கம் | 08 Unit வரை |
| Rice cooker | 30 Unit தொடக்கம் | 40 Unit வரை |
| மின்மோட்டார் (வீட்டுப்பாவனை) | 10 Unit தொடக்கம் | 15 Unit வரை |
| குளிர்சாதனப் பெட்டி | 30 Unit தொடக்கம் | 60 Unit வரை |
| மின்னழுத்தி | 05 Unit தொடக்கம் | 08 Unit வரை |
| மின்விசிறி | 10 Unit தொடக்கம் | 30 Unit வரை |
| T.V | 10 Unit தொடக்கம் | 15 Unit வரை |
| LED Tv | 07 Unit தொடக்கம் | 10 Unit வரை |
| Computer | 06 மணித்தியாலத்திற்கு | 03 முதல் 1 Unit |
| Air conditioner | 01 மணித்தியாலத்திற்கு | 02 Unit இல் இருந்து 05 Unit வரை |

**என்.ஜெயபாலசிங்கம்**
**(Jaffna Technical Institute)**

➢unit தொடக்கம் 30 unit வரை unit இற்கு 3.75சதம்

➢31 unit தொடக்கம் 60 unit வரை 7.66 சதம்
( 31 ஆவது unit இற்கு மேலதிகமாக 38.79 சதம் அறவிடப்படுகிறது )

➢61 unit தொடக்கம் 90 unit வரை 13.20 சதம்
( 61 unit இற்கு மேலதிகமாக 378.15 சதம் அறவிடப்படு கிறது )

➢91 தொடக்கம் 120 unit வரை unit இற்கு 37.10சதம்
( 91 ஆவது unit இற்கு மேலதிகமாக 513/= அறவிடப்படுகிறது)

➢121 தொடக்கம் 180 unit வரை unit இற்கு 42.70சதம்
( 181 ஆவது unit இற்கு மேலதிகமாக 107/= அறவிடப்படுகின்றது )

➢181 unit இற்கு மேல் ஒவ்வொரு unit இற்கும் 56.80சதம் அறவிடப்படுகிறது

➢<u>வியாபார ஸ்தபானங்களுக்கான மின்கட்டண விபரம்</u>
240 ரூபாவுடன் ஒவ்வொரு unit இற்கும் 24.38 சதம் அறவிடப்படுகிறது


## 01.06.2013 இலிருந்து வீடுகளுக்கான மின்சாரக்கட்டண விபரம்

| Units | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 30.00 | 33.75 | 37.50 | 41.25 | 45.00 | 48.75 | 52.50 | 56.25 | 60.00 | 63.75 |
| 10 | 67.50 | 71.25 | 75.00 | 78.75 | 82.50 | 85.25 | 90.00 | 93.75 | 97.50 | 101.25 |
| 20 | 105.00 | 108.75 | 112.50 | 116.25 | 120.00 | 123.75 | 127.50 | 131.25 | 135.00 | 138.75 |
| 30 | 142.50 | *187.85* | 194.19 | 200.54 | 206.88 | 213.23 | 219.57 | 225.92 | 232.25 | 238.61 |
| 40 | 244.95 | 251.30 | 257.64 | 263.99 | 270.33 | 276.68 | 283.02 | 289.37 | 295.71 | 302.06 |
| 50 | 308.40 | 314.75 | 321.09 | 327.44 | 333.78 | 340.13 | 346.47 | 352.82 | 359.16 | 365.51 |
| 60 | 371.85 | *763.20* | 776.40 | 789.60 | 802.80 | 816.00 | 829.20 | 842.40 | 855.60 | 868.80 |
| 70 | 882.00 | 895.20 | 908.40 | 921.60 | 934.80 | 948.00 | 961.20 | 974.40 | 987.60 | 1000.80 |
| 80 | 1,014.00 | 1,027.20 | 1,040.40 | 1,053.60 | 1,066.80 | 1080.00 | 1,093.20 | 1,106.40 | 1,119.60 | 1,132.80 |
| 90 | 1,146.00 | *1,696.10* | 1.733.20 | 1,770.30 | 1,807.40 | 1,844.50 | 1,881.60 | 1,918.70 | 1,955.80 | 1,992.90 |
| 100 | 2,030.00 | 2,067.10 | 2,104.20 | 2,141.30 | 2,178.40 | 2,215.50 | 2,252.60 | 2,289.70 | 2,326.80 | 2,363.90 |
| 110 | 2,401.00 | 2,438.10 | 2,475.20 | 2,512.30 | 2,549.40 | 2,586.50 | 2,623.60 | 2,660.70 | 2,697.80 | 2,734.90 |
| 120 | 2,772.00 | 2,814.70 | 2,857.40 | 2,900.10 | 2,942.80 | 2,985.50 | 3,028.20 | 3,070.90 | 3,113.60 | 3,156.30 |
| 130 | 3,199.00 | 3,241.70 | 3,284.40 | 3,327.10 | 3,369.80 | 3,412.50 | 3,455.20 | 3,497.90 | 3,540.60 | 3,583.30 |
| 140 | 3,626.00 | 3,668.70 | 3,711.40 | 3,754.10 | 3,796.80 | 3,839.50 | 3,882.20 | 3,924.90 | 3,967.60 | 4,010.30 |
| 150 | 4,053.00 | 4,095.70 | 4,138.40 | 4,181.10 | 4,223.80 | 4,266.50 | 4,309.20 | 4,351.90 | 4,394.60 | 4,437.30 |
| 160 | 4,480.00 | 4,522.70 | 4,565.40 | 4,608.10 | 4,650.80 | 4,693.50 | 4,736.20 | 4,778.90 | 4,821.60 | 4,864.30 |
| 170 | 4,907.00 | 4,949.70 | 4,992.40 | 5,035.10 | 5,077.80 | 5,120.50 | 5,163.20 | 5,205.90 | 5,248.60 | 5,291.30 |
| 180 | 5,334.00 | *5,497.80* | 5,556.60 | 5,615.40 | 5,674.20 | 5,733.00 | 5,791.80 | 5,850.60 | 5,909.40 | 5,968.20 |
| 190 | 6,027.00 | 6,085.80 | 6,144.60 | 6,203.40 | 6,262.20 | 6,321.00 | 6,379.80 | 6,438.60 | 6,497.40 | 6,556.20 |
| 200 | 6,615.00 | 6,673.80 | 6,732.60 | 6,791.40 | 6,850.20 | 6,909.00 | 6,967.80 | 7,026.60 | 7,085.40 | 7,144.20 |
| 210 | 7,203.00 | 7,261.80 | 7,320.60 | 7,379.40 | 7,438.20 | 7,497.00 | 7,555.80 | 7,614.60 | 7,673.40 | 7,732.20 |
| 220 | 7,791.00 | 7,849.80 | 7,908.60 | 7,967.40 | 8,026.20 | 8,085.00 | 8,143.80 | 8,202.60 | 8,261.40 | 8,320.20 |
| 230 | 8,379.00 | 8,437.80 | 8,496.60 | 8,555.40 | 8,614.20 | 8,673.00 | 8,731.80 | 8,790.60 | 8,849.40 | 8,908.20 |
| 240 | 8,967.00 | 9,025.80 | 9,084.60 | 9,143.40 | 9,202.20 | 9,261.00 | 9,319.80 | 9,378.60 | 9,437.40 | 9,496.20 |
| 250 | 9,555.00 | 9,613.80 | 9,672.60 | 9,731.40 | 9,790.20 | 9,849.00 | 9,907.80 | 9,966.60 | 10,025.40 | 10,084.20 |
| 260 | 10,143.00 | 10,201.80 | 10,260.60 | 10,319.40 | 10,378.20 | 10,437.00 | 10,495.80 | 10,554.60 | 10,613.40 | 10,672.20 |
| 270 | 10,731.00 | 10,789.80 | 10,848.60 | 10,907.40 | 10,966.20 | 11,025.00 | 11,083.80 | 11,142.60 | 11,201.40 | 11,260.20 |
| 280 | 11,319.00 | 11,377.80 | 11,436.60 | 11,495.40 | 11,554.20 | 11,613.00 | 11,671.80 | 11,730.60 | 11,789.40 | 11,848.20 |
| 290 | 11,907.00 | 11,965.80 | 12,024.60 | 12,083.40 | 12,142.20 | 12,201.00 | 12,259.80 | 12,318.60 | 12,377.40 | 12,436.20 |
| 300 | 12,495.00 | 12,553.80 | 12,612.60 | 12,671.40 | 12,730.20 | 12,789.00 | 12,847.80 | 12,906.60 | 12,965.40 | 13,024.20 |
| 310 | 13,083.00 | 13,141.80 | 13,200.60 | 13,259.40 | 13,318.20 | 13,377.00 | 13,435.80 | 13,494.60 | 13,553.40 | 13,612.20 |
| 320 | 13,671.00 | 13,729.80 | 13,788.60 | 13,847.40 | 13,906.20 | 13,965.00 | 14,023.80 | 14,082.60 | 14,141.40 | 14,200.20 |
| 330 | 14,259.00 | 14,317.80 | 14,376.60 | 14,435.40 | 14,494.20 | 14,553.00 | 14,611.80 | 14,670.60 | 14,729.40 | 14,788.20 |
| 340 | 14,847.00 | 14,905.80 | 14,964.60 | 15,023.40 | 15,082.20 | 15,141.00 | 15,199.80 | 15,258.60 | 15,317.40 | 15,376.20 |
| 350 | 15,435.00 | 15,493.80 | 15,552.60 | 15,611.40 | 15,670.20 | 15,729.00 | 15,787.80 | 15,846.60 | 15,905.40 | 15,964.20 |
| 360 | 16,023.00 | 16,081.80 | 16,140.60 | 16,199.40 | 16,258.20 | 16,317.00 | 16,375.80 | 16,434.60 | 16,493.40 | 16,552.20 |
| 370 | 16,661.00 | 16,669.80 | 16,728.60 | 16,787.40 | 16,846.20 | 16,905.00 | 16,963.80 | 17,022.60 | 17,081.40 | 17,140.20 |
| 380 | 17,199.00 | 17,257.80 | 17,316.60 | 17,375.40 | 17,434.20 | 17,493.00 | 17,551.80 | 17,610.60 | 17,669.40 | 17,728.20 |
| 390 | 17,787.00 | 17,845.80 | 17,904.60 | 17,963.40 | 18,022.20 | 18,081.00 | 18,139.80 | 18,198.60 | 18,257.40 | 18,316.20 |
| 400 | 18,375.00 | 18,433.80 | 18,492.60 | 18,551.40 | 18,610.20 | 18,669.00 | 18,727.80 | 18,786.60 | 18,845.40 | 18,904.20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 720 ஆங்கில ஆசிரியர்களுக்கு வடக்கில் பற்றாக்குறை

## பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கவலை



(கிளிநொச்சி)

**வடமாகாணத்தில் 720 இற்கும் மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற நிலையில், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான தகைமையானவர்கள் எமது பிரதேசத்தில் இல்லை என்பது வருத்தமளிக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

லிட்டில் எய்ட் நிறுவனத்தின் கணனிப்பயிற்சி பெற்ற கிளிநொச்சியைச் சேர்ந்த 54 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் அதன் தலைவர் ஆர்.விஜயசேகரின் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கணனி தொழில்நுட்ப கல்விக்காக ஏங்கிக் காத்திருக்கும் கிராமப்புற மாணவர்ககளுக்கும் துறை சார் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அதற்கான சேவையினை வழங்குவதற்கும் லிட்டில் எய்ட் நிறுவனம் முன்வர வேண்டும்.

இன்று உருவாக்கப்பட்டுள்ள இயல்பு சூழலானது எமது சமூகத்தையும் சர்வதேச போக்கோடு இணைந்து பயணிக்கவேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தியிருக்கின்றது. எனவே, அந்த வலைப்பின்னலோடு இணைந்து கொள்ள வேண்டிய தேவை எமது இளம் தலைமுறையினரின் வாழ்வில் மிக அவசியமாகவுள்ளது.

தொழில்நுட்பக் கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆர்வமிருந்தும் வறுமையின் காரணமாக அதைவெறும் கனவாகவே கருதிக்கொண்டிருந்த கிளிநொச்சி மாவட்ட மாணவர்களைத் தேடிவந்து கணனிப் பயிற்சிகளை வழங்கிவரும் லிட்டில் எய்ட் நிறுவனத்தின் சேவை பாராட்டுக்குரியது.

இதேவேளை, காலத்தின்தேவையறிந்து எமது மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியை கற்பிப்பதற்கு அந்நிறுவனம் ஏடுத்துள்ள முயற்சியையும் நாம் வரவேற்கின்றோம்,

இந்நிறுவனத்தின் சேவை நகரை அண்டிய பகுதிகளோடு மட்டும் நின்றுவிடாது இவ்வாறான கல்விக்காக ஏங்கிக்காத்திருக்கும் கிராமப்புற மாணவர்களையும் நாடிச் செல்லவேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான போட்டி அதிகரித்துள்ள உலகில் கல்வித்தரத்துடன் மேலதிகத் திறமைகளையும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்வதனூடாகவே வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும் என்ற சூழல் உருவாக்கம் பெற்றுள்ளது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அவ்வாறான திறமைசாலிகளையே எதிர்பார்க்கின்றன. அத்தோடு உலகின் இணைப்பு மொழியான ஆங்கில மொழியறிவும் மிக அவசியமானதாகக் கருதப்படுகின்றது.

ஆனால், மாணவர்களுக்கு பாடசாலைகளிலும் வெளியிலும் ஆங்கில அறிவை வழங்குவதற்கான ஆசிரியர் பற்றாக்குறையையும் எதிர்நோக்கவேண்டியுள்ளது. வடமாகாணத்தில் 720 இற்கும் மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற நிலையில் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான தகைமையானவர்கள் எமது பிரதேசங்களில் இல்லை என்பது வருந்தத்தக்கதே,

யுத்தத்திற்கு பின்னரான சூழலில் இன்று கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித் தரம் மேம்பட்டு வருகின்றது. மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தில் பாடசாலைகளை இயக்குவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 122 பாடசாலைகளும் தற்போது இயங்க ஆரம்பித்துள்ளன. அதில் 90 வீதமான பாடசாலைகள் அனைத்து பௌதீக வளங்களையும் நிறைவாக பெற்றுள்ளன. மாவட்டத்தின் கல்வித்தரமும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

இருப்பினும் நாம் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவதில் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றோம். கடந்தகால யுத்தம் எமக்கு உயிரிழப்புக்களையும் அவலங்களையும் மட்டும் தந்து விட்டுப்போகவில்லை. அது எமது சமூகத்தின் எதிர்காலத்திலும் பாரிய தாக்கத்தை உருவாக்கியுள்ளது. அதன்விளைவுகளை நாம் உணர்கின்றோம்.

எனவே, ஒரு முறையான திட்டமிடப்பட்ட கல்விச்செயற்பாட்டை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவத்னூடாகவே 30 வருட இழப்பை ஈடுசெய்யமுடியும் என்ற யதார்த்தத்தை நாம் உணர்கின்றோம். அவ்வாறான திட்டமிட்ட கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டத்தை நகர்த்தியதனூடாகவே இன்று கல்வியில் குறிப்பிடத்தக்க மேம்பாடும் எட்டப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ம-6)

## மதிய போசனம் ஒழுங்கின்மையால் மாணவர்களின் கற்றல் பாதிப்பு

### வவு.தெற்கு வலய அதிபர்கள் விசனம்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற உலக உணவுத் திட்ட மதிய போசனமானது ஒழுங்காக வழங்கப்படாமையால் மாணவர்களின் கற்றல் பாதிப்படைவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.


உலக உணவு திட்டத்தின் மூலம் வவுனியா தெற்கு வலயத்தில் உள்ள பாடசாலைகளின் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற மதிய போசனமானது குறிப்பிட்ட சில தினங்களாக வழங்கப்படவில்லை.

உலக உணவு திட்ட அதிகாரிகளால் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுகின்ற உணவுப் பொருட்களின் கையிருப்பு முடிவடைந்தமையால் கடந்த சில வாரங்களாக மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களின் கையிருப்பு முடிவடைந்தமை தொடர்பாக உலக உணவுத் திட்ட அதிகாரிகளுக்கும் வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளபோதிலும் பல நாட்களாக உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படவில்லை.

உணவுப் பொருட்கள் இன்மையால் மாணவர்களுக்கான மதிய போசனம் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் வகுப்பறையில் சோர்வுற்று காணப்படும் மாணவர்கள் கற்றலில் ஆர்வமின்றி இருக்கின்றனர்.

இந்நிலையை கருத்திற்கொண்டு உலக உணவுத் திட்ட அதிகாரிகளும் வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் பாடசாலைகளுக்கு உணவுப் பொருட்களை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அதிபர்கள் தெரிவிக்கின்றனர். (ம-266)





அறுகம்புல் வெலிய அரசினர் சிங்கள கலவன் பாடசாலையில் என்றிப் செயற்றிட்டத்தினூடாக அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதனையும் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

## நெடுங்கேணியில் துணிகர கொள்ளை

(பூந்தோட்டம்)

வவுனியா நெடுங்கேணியில் நேற்று முன்தினமிரவு மதுபான விற்பனை நிலையத்தில் கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு மேற்படி வர்த்தக நிலையத்தில் விற்பனையை நிறைவு செய்து பணத்தை எண்ணிக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைக்குண்டை காட்டி அங்கிருந்தவர்களை அச்சுறுத்தியதுடன் அவர்களை கடுமையாகத் தாக்கி அங்கிருந்த 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தினை கொள்ளையிட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-266)





## வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா பொது சந்தை வீதியிலுள்ள பொது மலசலகூடத்திற்கு முன்னால் இருந்து 55 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பொது சந்தை பகுதியில் சைக்கிள் திருத்தும் நிலையத்தின் உரிமையாளரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மரணமடைந்தவரின் சடலத்திற்கு அருகில் இருந்து மதுபான போத்தல் மற்றும் நஞ்சுத்திரவ போத்தல் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.(ம-250)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முல்லையிலிருந்து வெளிமாவட்ட மீனவர்கள் வெளியேறாவிடின்

# உண்ணாவிரத போராட்டம் உறுதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்து வெளி மாவட்ட மீனவர்களும் ஒரு வார காலத்திற்குள் வெளியேறாவிடின் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக முல்லைத்தீவு மீனவ சங்கங்கள் எச்சரித்துள்ளன.

இம் மாவட்டத்தில் 21 கடற்கரை கிராமங்கள் உள்ளன. இவை 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டு 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் போருக்கு முந்திய காலப்பகுதியில் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட படகுகள் தொழிலில் ஈடுபட்டு வந்ததோடு இக்காலப் பகுதியில் வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறலும் காணப்படவில்லை.

ஆனால், தற்போது பிரதேச மீனவர்களின் சுமார் 550 படகுகள் மாத்திரமே தொழிலில் ஈடுபடுகின்ற போது வெளிமாவட்ட மீனவர்களின் 650 இற்கும் மேற்பட்ட படகுகள் சட்டவிரோதமாக மீன்பிடித்து வருகின்றன.

குறிப்பாக கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், நாயாறு, செம்மலை, அளம்பில், தூண்டாய் பகுதி, முல்லைத்தீவு பட்டணம், முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், மாத்தளன் ஆகிய பகுதிகளில் தடைசெய்யப்பட்டுள்ள வலைகளைப்பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவதுடன் கடலட்டைகளையும் பிடித்து வருகின்றனர்.

இந்நடவடிக்கைகளால் பிரதேச மீனவர்கள் வாழ்க்கைச் செலவுகளை கொண்டு நகர்த்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந் நடவடிக்கைக்கு தீர்வு காணும் முகமாகவே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 32 மீனவர் சங்கங்களும் ஒன்றிணைந்து உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தயாராகியுள்ளன.

அத்துடன் நீரியல்வளத்துறை திணைக்களத்தினர் இதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-9-267)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(குருமன்காடு)

ஓமந்தை மாளிகை இலுப்பைக் குளம் வயல் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவது, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மாளிகை இலுப்பைக்குளத்தில் உள்ள வயலுக்கு சென்றவர் வாய்க்கால் அருகில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியவில்லை. இச்சம்பவத்தில் சேமமடு முதலாம் பகுதியை சேர்ந்த சிவகுரு இலங்கேஸ்வரன் (வயது 42) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சடலம் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதோடு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)




## ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத்தண்டனை விதிப்பு

(முல்லைத்தீவு)

பெண்ணொருவருக்கு பாலியல் தொல்லை செய்யும் நோக்குடன் சென்ற நபருக்கு ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கி முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு பாலியல் தொல்லை செய்யும் நோக்குடன் சென்ற நபரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த முல்லைத்தீவு நீதவான் நீதி மன்ற நீதவான் மா.கணேசராஜா குறித்த சந்தேக நபரை குற்றவாளியாகக் கண்டு ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கடூழிய சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (ம)

## மாற்றுத்திறனாளிகளுக்கு பொருட்கள் வழங்கும் நிகழ்வு

(முல்லைத்தீவு)

சிலாவத்தை மற்றும் சிலாவத்தை தெற்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு சிறுவர் நிதியத்தினூடாக பொருட்கள் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சிலாவத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய மேற்படி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகளுக்கும் மாற்றுத் திறனாளிகளாகவுள்ள மாணவர்கள் 22 பேருக்கு கற்றல் உபகரணங்களும் 50 மாற்றுத் திறனாளிகளுக்கு நுளம்பு வலைகளும் சிறுவர் நிதியத்தினர் ஊடாக வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் நிதியத்தின் வன்னி பிராந்திய முகாமையாளர் சி.மதிவண்ணன் கலந்து கொள்ளவுள்ளதுடன் அதிபர், ஆசிரியர்கள், கிராம சேவகர்கள் எனப்பலரும் வருகை தரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-9-267)

## 2,25,000 ரூபா அபராதம்

(முல்லைத்தீவு)

சட்டவிரோதமாக ஆண்டான்குளம் பாதுகாப்பு வனத்திற்குள் அத்துமீறி உள்நுழைந்து பாலைமரங்களை அரிந்த மூன்று நபர்களுக்கு 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

அத்துமீறி உள்நுழைந்து பாலை மரங்களை அரிந்த குற்றத்துடன் தொடர்புடைய மூவருக்கு எதிராக வனவள பாதுகாப்பு பிரிவினரால் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா மூன்று நபர்களுக்கும் தலா 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் பறிமுதல் செய்யப்பட்ட 4 இலட்சத்து 67 ஆயிரத்து 485 ரூபா 86 சதம் பெறுமதியான பாலை மரங்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு பாரப்படுத்தப்பட்டன. (ம)

# இரட்டை போட்டிகளிலும் கிளி/மகா வித்தி. வெற்றியை தனதாக்கிக் கொண்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கெதிரான துடுப்பாட்டப் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் 15 வயதுப் பிரிவு அணி 206 ஓட்டங்களாலும் 17 வயதுப் பிரிவு அணி 54 ஓட்டங்களாலும் வெற்றி கொண்டு தமது வெற்றியை நிலை நாட்டியுள்ளனர்.

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தால் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவின் பிரிவு 3 இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டி அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி துடுப்பாட்டத்தை ஆரம்பித்த கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 304 ஓட்டங்களை குவித்தது.

கிளிநொச்சி மகாவித்தியாலயம் சார்பாக அதன் அணித்தலைவர் ஜெ.கஜீபன் 92 பந்துகளில் சதத்தை கடந்து ஆட்டமிழக்காது 20 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 142 ஓட்டங்களையும் மு.நிதுசன் அரைச்சதம் கடந்து ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சோபிதன் ஓர் இலக்கினை வீழ்த்தினார்.

தொடர்ந்து 305 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 38 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் சார்பாக மதுஷன் 6 இலக்குகளையும் டனுஜன் 2 இலக்குகளையும் சூபிட்சன், புருசோத் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றியிருந்தனர்.

இதன்மூலம் கிளிநொச்சி மகா வித்தியாலயம் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை 206 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை எதிர்கொண்ட கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் 17 வயதுப் பிரிவு அணி 54 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 17 வயதுப் பிரிவினரின் பிரிவு 3 இற்கான போட்டி அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 35 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அதிக பட்சமாக ரஜீபன் 44 ஓட்டங்களையும் தனுஜன் 26 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி சார்பாக தர்சன் 3 இலக்குகளையும் வசந்தன் 2 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர்.

தொடர்ந்து 199 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 35 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்த நிலையில் 144 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் கன்யூட் 36 ஓட்டங்களையும் தர்சன் 25 ஓட்டங்களையும் உயர்ந்தபட்ச ஓட்டங்களாக அணிக்கு பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ரவிப்பிரகாஸ் 4 இலக்குகளையும் யதுசன் 2 இலக்குகளையும் விதுசன், பிரகாஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றியிருந்தனர்.

இதன்மூலம் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை கிளிநொச்சி இந்து கல்லூரி 35 பந்துப் பரிமாற்றங்களுக்குள் முடக்க அதே பந்துப் பரிமாற்ற எண்ணிக்கைக்குள் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை மடக்கிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 54 ஓட்டங்களால் வெற்றியை ஆரத் தழுவிக் கொண்டது. (அ-ம-5)



*15 வயதுப் பிரிவில் அதிரடிச் சதம் அடித்த கஜீபன்...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோட்ட ஏமாற்றுக்காகவே இந்திய-இலங்கை அரசுகள் பேச்சு

(சென்னை)

**உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவவும் பொதுநலவாய மாநாட்டில் இலங்கை அரசின் மீதான குற்றங்களை மறைக்கவும் முன்னோட்ட ஏமாற்று வேலையாக 13 ஆவது சட்ட திருத்தத்தைப் பற்றி ஒரு கருத்தாடலை, விவாதத்தை முன்வைக்கும் மோசடி வேலையில் இந்திய-இலங்கை அரசுகள் ஈடுபட்டுள்ளன என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் நரித்தந்திரத்தால் போபர் ஊழலில் சிக்கி இருந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மக்கள் கவனத்தைத் திசை திருப்ப ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம்தான் 1987 ஆம் ஆண்டு இந்திய- இலங்கை ஒப்பந்தம்.

அந்த ஒப்பந்தத்தில் வடக்கு மாகாணத்தோடு கிழக்கு மாகாணத்தை இணைப்பது குறித்து, கிழக்கு மாகாணத்தில் மூன்று மாத காலத்துக்குள் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று கூறப்பட்டது.

ஆனால், ஒப்பந்தத்தின் கையெழுத்து மை உலர்வதற்கு முன்னரே வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்துப் பிரசாரம் செய்வேன் என்று ஜெயவர்த்தன அறிவித்ததும், ஒப்பந்தத்துக்கு எதிராக விடுதலைப்புலிகள் 17 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து பலாலி விமான தளத்தில் காவலில் வைத்ததும், அவர்களைப் பாதுகாக்க முனைந்த இந்திய இராணுவத்தின் கட்டுக்காவலை இந்திய அரசு விலக்கச் செய்ததால் குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 தளபதிகள் நச்சுக்குப்பி கடித்து மாண்டதும், விடுதலைப்புலிகளின் தொலைக்காட்சி, செய்தித்தாள் நிறுவனங்களை இந்திய இராணுவம் வெடிகுண்டு வைத்து அழித்ததும், புலிகள் மீது இந்திய இராணுவம் தாக்குதல் தொடுத்ததும், அதனைப் புலிகள் எதிர்கொள்ள நேர்ந்ததும் இந்திய அரசின் துரோகச் செயல்கள் ஆகும்.

எனவே, அந்தக் காலகட்டத்திலேயே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை, இருநாட்டு அரசுகளும் தீயிட்டு, அதன் சாம்பல் வங்கக் கடலில் கரைக்கப்பட்டு விட்டது. கடந்த ஆண்டு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் 13 ஆவது சட்டத் திருத்தம் குறித்து இலங்கை ஜனாதிபதியோடு பேசியதாகக் கூறியதை இலங்கை அரசு உடனே மறுத்தது.

தலைக்குமேல் தொங்கும் கத்தியாக இலங்கை அரசின் அடக்குமுறை அச்சுறுத்தும் நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களை நிர்பந்தப்படுத்தி வருகின்றனர்.

ஈழத்தமிழர்களுக்குத் துளியும், நீதி வழங்காத 13ஆவது சட்ட திருத்தத்தை முற்றிலும் நீர்த்துப் போக வைக்கும் நோக்கில் ஒப்புக்குச் சொல்லப்பட்ட ஒன்றிரண்டு சொற்ப அதிகாரங்களைக்கூடப் பறிக்கும் விதத்தில் இச்சட்ட திருத்தத்தைத் தெரிவுக் குழுவுக்கு இலங்கை அரசு அனுப்புகிறது. 13 ஆவது சட்டதிருத்தத்தை நிறைவேற்ற இலங்கை அரசுக் குத் தெரிவிப்போம் என்று இந்தியப் பிரதமர் தங்களிடம் கூறியதாக டில்லி சென்று திரும்பிய சம்பந்தன் குழுவினர் கூறினர்.

ஈழத்தமிழர்களின் குருதி படிந்த மயானபீடத்தில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை எதிர்வரும் நவம்பர் 17, 18 ஆம் திகதிகளில் இலங்கையில் நடத்த இருக்கும் செயல் மாபாதகக் கொடுமை ஆகும். அப்படி நடந்தால் அதன்பின் இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கை ஜனாதிபதியே பொதுநலவாய மாநாட்டு அமைப்புக்குத் தலைமை வகிப்பார்.

உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவவும் பொதுநலவாய நாடுகளில் இலங்கை அரசு மீதான குற்றங்களை மறைக்கவும் முன்னோட்ட ஏமாற்று வேலையாக 13ஆவது சட்ட திருத்தத்தைப் பற்றி ஒரு கருத்தாடலை, விவாதத்தை முன்வைக்கும் மோசடி வேலையில் இந்திய-இலங்கை அரசுகள் ஈடுபட்டுள்ளன.

இனப்படுகொலையின் கூட்டுக் குற்றவாளிகள் இன்று டில்லியில் சந்திக்கிறார்கள் என்பதைத்தான் தாய்த்தமிழகத்து மக்களும் தரணி வாழ் தமிழர்களும் நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு வைகோ கூறியுள்ளார். (அ-2)

## 2ஆம் அருளப்பர் சின்னப்பருக்கு புனிதர் பட்டம் வழங்க முடிவு



(வாடிகன்சிட்டி)

மறைந்த போப் ஆண்டவர் 2ஆவது அருளப்பர் சின்னப்பருக்கு புனிதர் பட்டம் வழங்கப்படவுள்ளதாக வத்திக்கான் இறையியல் நிபுணர்கள் முடிபு செய்துள்ளனர்.

• முன்னாள் போப் ஆண்டவர் 2ஆவது அருளப்பர் சின்னப்பர் கடந்த 2005ஆம் ஆண்டு மரணம் அடைந்தார். பொதுவாக மறைந்த பின்னர் அற்புதங்கள் நிகழ்த்தும் கிறிஸ்தவ பாதிரியார்கள் மற்றும் கன்னியாஸ்திரிகளுக்கு புனிதர் பட்டம் வழங்கப்படுகிறது. அந்த பட்டம் மறைந்த போப் ஆண்டவர் 2ஆவது அருளப்பர் சின்னப்பருக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

போலந்து நாட்டைச் சேர்ந்த இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் மரணம் அடைந்த 6 மாதத்தில் ஒரு அற்புதம் நிகழ்த்தினார். அதாவது பிரார்த்தனைக்குப்பின் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கன்னியாஸ்திரி ஒருவரின் கடுமையான பக்கவாத நோயை குணப்படுத்தினார்.

2011ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இரண்டாம் அருளப்பர் சின்னப்பருக்கு வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் தெய்வீகர் பட்டம் வழங்கப்பட்டது. அன்றே அவர் மற்றொரு தெய்வீகமான அற்புதத்தைச் செய்தார்.

எனவே, 2 அற்புதங்களை நிகழ்த்திய அவருக்கு புனிதர் பட்டம் வழங்க வத்திக்கான் இறையியல் நிபுணர்கள் முடிவு செய்துள்ளனர். அதற்கான விழா வத்திக்கான் நகரில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இந்த தகவலை இத்தாலி செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. (அ-2)

## ஆலோசகராக சூசன்ரைஸ்



அமெரிக்க ஜனாதிபதிக்கு உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைகள் குறித்த ஆலோசனை வழங்கும் முக்கிய பதவிக்கு சூசன்ரைசை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி தேர்ந்தெடுத்தார். நேற்றையதினம் சூசன்ரைஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக பதவியேற்றுக் கொண்டார்.

இதனையடுத்து அவர் தனது டுவிட்டர் தளத்தின் ஊடாக கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 4, 5 ஆண்டுகளாக அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளுக்கான தூதராக இருந்து ஜனாதிபதிக்கு சேவை செய்தது பெருமையாக உள்ளது. தேசிய பாதுகாப்பு ஆலோசகராக வெள்ளை மாளிகையில் பணியை தொடங்கப் போவதை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

இவர் அமெரிக்கா, இந்தியாவுடன் உறுதியான உறவை ஏற்படுத்திக்கொள்ள பெரும் பங்காற்றினார். மேலும், கடந்த ஓகஸ்ட் மாதம் இந்தியாவுக்கு குடும்பத்துடன் சுற்றுலா வந்தபோது இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளைச் சந்தித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## ஆஸியில் முதல்முறையாக முஸ்லிம் அமைச்சர் பதவியேற்பு



(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் முதல் முறையாக இஸ்லாமிய மதத்தை சேர்ந்த ஒருவர் அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவரான ஈத் ஹியூசிக் (வயது 43) நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சராக நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இஸ்லாம் மதத்தை சேர்ந்த ஒருவர் அவுஸ்திரேலியாவில் அமைச்சராக பொறுப்பேற்பது இதுவே முதன் முறையாகும்.

இந்தப் பெருமையை பெற்ற ஈத் ஹியூசிக் குர்ஆனை கையில் வைத்துக் கொண்டு பதவிப்பிரமாணம் ஏற்றார். இதை சமூக இணையதளங்களில் ஏராளமானோர் விமர்சித்துள்ளனர். ஆனால், இதைப் பற்றி எல்லாம் கவலைப்படபோவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்,

இஸ்லாம் மதத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள நான் நேர்மையான முறையில் பதவியேற்றேன். நான் வேற்று மதத்தினரின் புனித நூலை கையில் வைத்துக் கொண்டு பதவிப்பிரமாணம் எடுக்கவில்லை. என்னுடைய சமூக இணையத்தளத்தில் விமர்சனம் செய்பவர்களின் நடவடிக்கை ஜனநாயகத்தின் ஒரு பகுதிதான் என்றார். (அ-2)

## சுமாத்ரா தீவில் நிலநடுக்கம்! 22 பேர் பலி; 210 பேர் காயம்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 22 பேர் பலியாகியுள்ளனர். 210 பேர் காயமடைந்தனர். மேலும் ஏராளமானவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவில் உள்ள ஏக் மாகாணத்தில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் சுமாத்ரா தீவின் தலைநகர் மேடன் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் பூமி அதிர்ந்தது. வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இது சுமார் 15 விநாடிகள் நீடித்தது. இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகள் மற்றும் கட்டடங்களை விட்டு வெளியேறி வீதிகளில் ஓட்டம் பிடித்தனர்.

இந் நிலநடுக்கம் காரணமாக சுமார் 350 வீடுகள் இடிந்து விழுந்தன. ஆயிரக்கணக்கான கட்டடங்கள் மற்றும் வீடுகள் சேதம் அடைந்தன. இடிபாடுகளில் சிக்கி 22 பேர் பலியாகியுள்ளதுடன் 210 பேர் காயமடைந்தனர். மேலும் ஏராளமானவர்கள் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். இவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தில் ஏக் மாகாணத்தில் உள்ள பல கிராமங்களில் ஏராளமான வீடுகள் தரைமட்டமாகின. ஒரு மசூதியும் இடிந்து விழுந்துள்ளது. இதில் இடிபாடுகளில் சிக்கி 6 குழந்தைகள் உயிரிழந்தனர். மேலும் பலர் சிக்கியுள்ளனர். இதற்கிடையே அங்கு 6.7 ரிக்டரில் நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏக் மாகாணத்தின் பெனெர் மெரியா மலை மாவட்டத்தில் பூமிக்கு அடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வத்தை விட செல்வாக்கு மேலானது.
- க்ளிப்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முட்டுக்காய்த் தேங்காய்கள் பிட்டுக்கு நல்லம் ; சொதிக்கு அல்ல

பருவத்தால் பழுத்தல் என்ற விடயம் குறித்து எவரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் பருவத்தால் பழுத்தல் என்பது மிகவும் முக்கியமான சமாச்சாரம்.

பருவத்தால் பழுக்கும் போதே பழத்தின் சுவையும் மரத்தின் முளைப்பும் ஆரோக்கிய மானதாக இருக்கும்.

மாறாக பருவம் அடையாதவை பழுத்தவை அல்ல. அவை, தத்தம் பருவத்துக்கேற்ப குறை இயல்பைக் கொண்டிருப்பவை.

குறிப்பாக தென்னை மரத்தை எடுத்துக் கொண்டால் தேங்காயில் பிஞ்சுப்பருவம் குரும்பை என்று அழைக்கப்படும்.

அதன் இரண்டாம் நிலைப் பருவம் இளநீர் என்று கூறப்படும்.

தனித்து தண்ணீரை மட்டுமே அது கொண்டிருப்பதால் அதற்கு இளநீர் என்று பெயர். குரும்பை என்ற திண்மப்பொருள் பருவத்தின் அசைவால் தனக்குள் நீரை உருவாக்கிக் கொள்ள, குரும்பை என்ற பதம் நீக்கப்பட்டு இளநீர் எனத் திரவத்தின் பெயரை தாங்கி நிற்கிறது.

இப்போது மூன்றாம் நிலை முட்டுக்காய்ப் பருவம். முட்டுக்காய் பருவம் கடந்து தேங்காய் என்ற நிலைக்கு வந்துவிட்டால் அதற்கான மதிப்பும் மரியாதையும் சொல்லும் தரம் அன்று.

ஆனாலும் அதற்கும் சில காலம் எடுத்துக் கொள்ளும். சில வேலைகளில் பழுத்த தேங்காய் மரத்திலிருக்க, முட்டுக்காய் வீழ்வதும் உண்டு.

அதற்காக விழுந்தது தேங்காய் என்றும், மரத்திலிருப்பது முட்டுக்காய் என்றும் யாரும் நினைத்துவிடக் கூடாது.

விழுந்தது தேங்காயா? முட்டுக்காயா? என்பதை ஆராய்ந்து அறிவது மக்களின் தலையாய கடமை.

அத்தகையதொரு நிலைமையை இங்கு சுட்டிக்காட்டுவது, முட்டுக்காயை குறைகூறுவதற்கன்று.

மாறாக முட்டுக்காய் என்ற பருவம், தேங்காயின் தேவையை பூர்த்தி செய்யாது என்பதற்காகவே இக் கருத்து இங்கு முன்னிலைப் படுத்தப்படுகிறது.

இத்தகையதொரு நிலைமைதான் எங்கள் அரசியலிலும் இருப்பதைக் காண முடியும்.

நல்ல பழுத்த தேங்காய்கள் மரத்திலிருக்க கால சூழ்நிலையால் வீழ்ந்த முட்டுக்காய்கள் தேங்காய்களாகி திருவீதி வலம் வரலாயிற்று.

என்ன செய்வது! பழுத்த தேங்காய்கள் மரத்தை விட்டு மண்ணுக்கு வர விருப்பம் இல்லாததன் காரணமாகவோ என்னவோ பருவம் தப்பி வீழ்ந்த முட்டுக்காய்கள் கும்பத்தேங்காய் ஆகும் துரதிர்ஷ்டம் ஏற்பட்டமை மக்கள் செய்த முன்வினைப் பயன் என்றே கூற வேண்டும்.

இதை நாம் கூறும் போது சிலர் எங்கள் மீது கோபம் கொள்ளலாம்.

ஆனாலும் முட்டுக்காய் தேங்காய்கள் பிட்டுக்கு நல்லம் ; சொதிக்கு அல்ல.

இங்கு முட்டுக்காய்க்கும் தேங்காய்க்கும் இடையில் காலத்தின் கணக்கிடல் முக்கிய மானது.

ஆனால், எங்கள் அரசியலில் வயதுக்கு எந்த தொடர்பும் கிடையாது. இங்கு பட்ட அனுபவிப்புகளே முக்கியமானவையாகும்.

# மகனின் செயல் ஒரு சிறிய விடயம்; விசாரணையை ஆதரிப்பேன்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கிரிக்கெட் வீரரான எனது மகன் பிரித்தானிய விமானத்தில் கதவைத் திறக்க முயற்சித்தமையானது ஒரு சின்ன விடயமாகும் என்று ரமித் ரம்புக்வெலவின் தந்தையும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மேலும்இதுஒருசிறியவிடயமாகுமென அந்த விமான சேவை நிறுவனமே கூறியிருக்கின்றது.இந்நிலையில் இலங்கை ஊடகங்கள் இந்த செய்திக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குத் திரும்பியவுடன் இது குறித்து மகன் என்னிடம் கூறியதுடன் தான் விமானத்திலிருந்தவர்களிடம் மன்னிப்பு கோரியதாகவும் தெரிவித்திருந்தார்.

விமானத்தின் பின்னால் உள்ள கதவுக்கும் மலசலகூட கதவுக்கும் இடையில் இரண்டு மீற்றர் தூரம்கூட இல்லை. யாருக்கும் இவ்வாறான தவறுகள் இடம்பெறலாம்.

இதற்கு முன்னரும் இவ்வாறான தவறுகள் இடம்பெற்றிருக்கின்றன. எதிர்காலத்திலும் இவ்வாறான தவறுகள் இடம்பெறலாம் என்ற பிரித்தானிய விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கை கிரிக்கெட் சபை முன்னெடுக்கின்ற விசாரணைக்கு நான் ஆதரவளிப்பேன் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு சிறிய விடயமாகும் என பிரித்தானிய விமான சேவை அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்ற நிலையில் சகல ஊடகங்களிலும் இவ்விடயம் மட்டுமே இருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

பிரித்தானிய விமான சேவையின் அறிக்கை எனது கையில் இருக்கின்றது. இந்தச் சம்பவமானது சிறிய விடயமென அதில் இருக்கின்றது. இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் எதிர்காலத்திலும் இடம் பெறலாம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# புதையல் தோண்ட முற்பட்ட 15 பேர் கைதாகினர்

மெதிகிரிய பொலிஸ் பிரிவின் விகாரமாக திவுலன்கடவல பிரதேசத்தில் தனியார் காணியொன்றில் புதையல் தோண்ட முற்பட்ட 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலனறுவை தொல்பொருள் பொலிஸ் பிரிவுக்கு பிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் மெதிகிரிய பொலிஸ் தொல்பொருள் பிரிவினர் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் திவுலன்கடவல மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது.

இவர்களிடம் இருந்து இரண்டு வான்கள் உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் ஹிங்குரன்கொட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப் படவுள்ளனர். (அ-2)

# துப்பாக்கி தயாரிக்கும் இடம் சுற்றி வளைப்பு

(திருகோணமலை)

திருக்கோவில் பிரதேசத்தில் இயங்கி வந்த சட்டவிரோத துப்பாக்கி தயாரிக்கும் இடமொன்றை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர். திருக்கோவில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றை அடுத்து இந்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தயாரிக்கப்பட்டு வந்த 3 துப்பாக்கிகள், மூன்று ரவைகள்,10 கிராம் வெடிமருந்து மற்றும் 10 ஈயத்தகடு என்பவற்றை பொலிஸார் குறித்த இடத்தில் இருந்து மீட்டுள்ளனர். சந்தேகநபர் பொத்துவில் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப் படவுள்ளார். திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## மகிழ்வூட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளியில் 3 மழலைகளின் மகிழ்வூட்டல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாளை மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் முன்பள்ளியில் நடைபெறும் இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறார்களை மகிழ்வூட்டுமாறு முன்பள்ளியினரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# மஹோற்சவம்

(சிவநகர்)

கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வர ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறமும் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

அத்தோடு 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு தீர்த்தமும் நடைபெற்று 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ம-9,254)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

முரசுமோட்டை சேற்றுக்கண்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறவுள்ளன.


மஹோற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அத்தோடு 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ம-9,16)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

(துன்னாலை)

துன்னாலை தெற்கு ஸ்ரீபூதேஸ்வர சிவன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன. மஹோற்சவத் தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# இறைவனுக்கு ஏன் பால் அபிஷேகம்?



இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் ஒவ்வொரு பொருளுக்கும் தனிப்பலன் உண்டு. பால் நீண்ட வாழ்வையும் தயிர் புத்திர விருத்தியையும் நெய் மோட்சத்தையும் பஞ்சகவ்யம் ஆன்ம விருத்தியையும் தரும். பாற்குடம் எடுத்துவந்து முருகனுக்கு அபிஷேகம் செய்வது தனிச்சிறப்பு. பசுவின் முலைகளில் ஏழு சமுத்திரங்கள் வாசஞ்செய்வதால் பால் அபிஷேகம் செய்வது ஏழு சமுத்திரங்களைக் கொண்டு இறைவனை அபிஷேகம் செய்ததாகக் கருதப்படும்.

# சத்திய தரிசனம்



மக்கள் கடவுளை படம், பிம்பம் அல்லது மெழுகினாலான பொம்மை ஆகியவற்றில் காண்கின்றனர். ஆனால் தர்மத்தில்தான் கடவுள் அதிக அளவு வெளிப்படுகிறார். தர்மத்தினை நம்புகிறவர்களை மட்டுமே நம்பிக்கை உள்ளவர்கள் என்று அழைக்கலாம். அவ்வாறு அல்லாதவர்கள் இறைவன் எனும் பதத்தை பெருத்தளவில் உபயோகித்தாலும்கூட அனைவரும் உண்மையில் நாத்திகர்கள் ஆகின்றனர். அவர்கள் பெருத்தளவிலான செல்வத்தை தீர்த்த யாத்திரைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் எனச் செலவிடலாம். ஆனால் அவை அவர்களை இறைவனுக்கு அருகே இட்டுச் செல்லாது.

தினமும் பஜனை, பூசை முதலியவற்றை ஒழுங்காகச் செய்யுங்கள். ஆனால் சமூகத்தை கடவுளின் வடிவமாகப் பாருங்கள். சமூகத்தை இறைவனது சர்வ வியாபகத் தன்மையாகக் கண்டுகொண்டு அவ்வாறு சமூகத்துக்கு சேவை செய்வதன் மூலம் உயரிய குணங்களை வளர்த்துக்கொள்ளுங்கள். பக்திநிலை மாறாமலே இருப்பதால் உங்கள் எல்லோருக்கும் ஏமாற்றம்தான் ஏற்படுகிறது.

# கம்யூனிஸ்ட் கட்சியின் 70ஆவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டுவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஆண்டு விழாவின் சிறப்புரையை நேபாள முன்னாள் பிரதமரும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான தோழர் மாதேவ் குமார் நேபாள் வழங்கவுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முக்கோணச் சுற்றில் மும்முனைத் தாக்குதலினால் இலங்கையிடம்

# வீழ்ந்தது இந்தியா

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் முக்கோணச் சுற்றில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என மூன்றிலும் இலங்கை வீரர்கள் கலக்க 161 ஓட்டங்களால் இந்தியா இலங்கையிடம் வீழ்ந்தது.


இந்திய அணித் தலைவர் தோனி தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக போட்டியில் இருந்து ஒதுங்க விராட் கோலி தலைமையில் களமிறங்கியது இந்திய அணி . நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.


இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு அனுபவ ஜெயவர்தனா, தரங்கா சேர்ந்து அனல் பறந்த ஆரம்பத்தைக் கொடுத்தனர். இந்திய பந்துவீச்சை நாலா புறமும் துவம்சம் செய்த இவர்கள், அதிவிரைவாக ஓட்டங்களைக் குவித்தனர். இஷாந்த் ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், பவுண்டரி அடித்த ஜெயவர்தனா, ஒருநாள் அரங்கில் தனது 16ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். பின் அஷ்வின் பந்தில் ஒரு சிக்சர் அடித்த ஜெயவர்தனா, அடுத்த பந்தில் 107 ஓட்டங்களுடன் (9 பவுண்டரி, 2 சிக்சர்) ஆட்டமிழந்தார். தொடர்ந்து களத்திலே நின்ற தரங்க தனது அபார ஆட்டத்தை தொடர்ந்து சதம் கடந்தார்.

இறுதிக் கட்டத்தில் அதிரடி காட்டிய தரங்கா, ஷமி அகமது ஓவரில் 3 பவுண்டரிகளை விளாசினார். மறுபக்கம் அணித் தலைவர் மத்யூஸ் தன் பங்கிற்கு ரவிந்திர ஜடேஜா ஓவரில் 2 சிக்சர் அடிக்க, ஓட்ட எண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்தது. தொடர்ந்து உமேஷ் யாதவ், ஷமி அகமது பந்துகளை சிக்சருக்கு அனுப்பினார் தரங்கா. கடைசி 16 ஓவரில் 180 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. இறுதியில் இலங்கை அணி 50 ஓவர் நிறைவில் ஒரு விக்கெட்டினை இழந்து 348 ஓட்டங்களைக் குவித்தது. தரங்கா (174ஓட்டங்கள் - 19 பவுண்டரி, 3 சிக்சர்) மத்யூஸ்(44 ஓட்டங்கள், 4 பவுண்டரி, 1 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இமாலய இலக்கை துரத்திய இந்திய அணிக்கு ரோகித் சர்மா (5), ஷிகர் தவான் (24) ஜோடி சொதப்பல் தொடக்கம் அளித்தது. பின் வந்த முரளி விஜய் (30) நிலைக்கவில்லை. அணித் தலைவர் கோஹ்லி (2) நீண்ட நேரம் தாக்குப்பிடிக்கவில்லை. தினேஷ் கார்த்திக் (22), ரெய்னா (33) ஓரளவு கைகொடுத்தனர். பின் வந்த ஜடேஜாவுடன் இணைந்த அஷ்வின் (4), ஷமி அகமது (0), இஷாந்த் சர்மா(2), உமேஷ் யாதவ (0) யாரும் ஒற்றை இலக்கை தாண்டவில்லை. இந்திய அணி 44.5 ஓவரில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 161 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இலங்கை அணி சார்பில் ஹெராத் 3 விக்கெட் சாய்த்தார். ஆட்டநாயகன் விருதை இலங்கையின் தரங்கா வென்றார். பங்கேற்ற இரண்டு லீக் போட்டியிலும் தோல்வியடைந்த இந்திய அணி புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது. எஞ்சியுள்ள இரண்டு லீக் போட்டியில் வெற்றி பெற்றாலும் இந்திய அணி இறுதி ஆட்டத்துக்கு முன்னேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.





### கோட்டைவிட்ட வீரர்கள்

இந்திய அணியின் களத்தடுப்பு மோசமாக இருந்தது. ஜெயவர்தனா 25 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜடேஜா பந்தில் கொடுத்த சுலப பிடியெடுப்பை முரளி விஜய் கோட்டைவிட்டார். இதை பயன்படுத்திய இவர், சதம் அடித்தார். இதேபோல தரங்கா 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில், ரன் அவுட் வாய்ப்பை ரோகித் சர்மா தவறவிட்டார்.

## ராம்பால் வெளியேறினார்

மேற்கிந்தியத் தீவுகள் அணியில், காயமடைந்துள்ள வேகப் பந்துவீச்சாளர் ரவி ராம்பாலுக்கு பதிலாக ஜேசன் ஹோல்டர் சேர்க்கப்பட்டுள்ளார். இலங்கை அணியுடன் நடந்த தொடக்க லீக் ஆட்டத்தில் விளையாடிய ரவி ராம்பால், கணுக்கால் காயம் காரணமாக அவதிப்பட்டு வருகிறார். இதையடுத்து, முத்தரப்பு தொடரில் எஞ்சியுள்ள லீக் ஆட்டங்களில் அவர் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விசாரணைகள் ஆரம்பம்

மதுபோதையில் விமானத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ் விசாரணையின் போது குறித்த வீரர் குற்றவாளி என கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை கிரிக்கெட் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் வீரரொருவர் 35 ஆயிர[illegible]டி உயரத்தில் பறந்துக்கொண்டிருந்த விமானத்தின் கதவை திறக்க முயன்றமையினால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இவரது நடவடிக்கை தொடர்பில் மேற்படி குழுவின் முகாமையாளரது அறிக்கையின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்குழுவின் முகாமையாளராக ஜயந்த செனவிரத்ன கடமையாற்றுகிறார்.

ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் மகனான ரமித் ரம்புக்வெலவே விமானத்தின் கதவை திறக்க முயற்சித்தார் என இலங்கை கிரிக்கெட் சபை தெரி வித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையி[illegible]யே மேற்கண்டவாறு குறிபபிடப்பட்டுள்ளது.


## பாக்.வீரர் ஆஸி அணியில்

அவுஸ்திரேலிய குடியுரிமை வ்ழங்கப்பட்டதால் பாகிஸ்தான் வீரர் பவாத் அகமது ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகீஸ்தானில் பிறந்த பவாத் அகமது (வயது 31) சிறந்த லெக் ஸ்பின்னராக 10 முதல் தர போட்டிகளில் விளையாடியுள்ளார்.

பின்னர் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் பாகிஸ்தானில் பெண் கல்வியின் வளர்ச்சிக்காக பாடுபட்டார். இதையடுத்து இவரது உயிருக்கு பயங்கரவாதிகளிடம் இருந்து மிரட்டல் வந்ததாம்.

உடனே 2010இல் அவுஸ்திரேலியாவுக்கு குறுகிய கால விசாவில் சென்றார். இங்கு அவுஸ்திரேலிய "ஏ" அணிக்காக விளையாடினார்.



பின்னர் தஞ்சம் அடைய முடிவு செய்த இவர், நிரந்தர குடியுரிமை கேட்டு விண்ணப்பித்தார். விளையாட்டு வீரர் என்ற அடிப்படையில் இவருக்கு விரைவாக அவுஸ்திரேலிய குடியுரிமை வழங்கப்பட்டது.

ஷேன் வோனின் ஓய்வுக்குப் பின்பு தரமான சுழற்பந்துவீச்சாளர் இல்லாமல் தவித்து வரும் அவுஸ்திரேலிய அணிக்கு பவாத் அகமது வரவு சிறந்த வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி தொடங்கும் இங்கிலாந்துக்கெதிரான பாரம்பரியமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் இவர் இடம் பெற வாய்ப்பு உள்ளது.

இது குறித்து பவாத் அகமது கூறுகையில், என்னால் நம்பவே முடியவில்லை. இதை மிகப் பெரும் கௌரவமாக கருதுகிறேன். சிறப்பு சலுகை காட்டிய அரசுக்கு நன்றி.

எனக்காக சட்டத்தையே மாற்றியது சாதாரண காரியம் அல்ல. தற்போது அவுஸ்திரேலிய குடிமகனாகி விட்டேன். கிரிக்கெட்டில் தொடர்ந்து கவனம் செலுத்துவேன் என்றும் கிரிக்கெட் அரங்கில் எனக்கு பிரகாசமான எதிர்காலம் உண்டு எனவும் கூறினார்.

### லண்டன் விம்பிள்டன் டெனிஸ்;

# அரையிறுதி ஆட்டங்கள் இன்று

விம்பிள்டன் டெனிஸ் அரையிறுதி ஆட்டங்கள் லண்டனில் இன்று நடைபெறுகின்றன.


ரத்வன்ஸ்கா (போலந்து) - லிசிக்சி (ஜேர்மனி), மரியான் பர்ட்டோலி (பிரான்ஸ்) - பிலிப்ஹென்ஸ் (பெல்ஜியம்) ஆகியோர் அரையிறுதியில் மோதுகிறார்கள்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற காலிறுதியில் சபைன் லிசிக்கி 6-3, 6-3 என்ற செட்களில் எஸ்தோனியாவின் கயா கனேபியை தோற்கடித்தார். இதன்மூலம் கடந்த 4 ஆண்டுகளில் விம்பிள்டன் அரையிறுதிக்கு இரண்டாவது முறையாக முன்னேறியுள்ளார் லிசிக்கி. முன்னதாக காலிறுதியில் நடப்பு சம்பியன் செரீனா வில்லியம்ஸை, லிசிக்கி தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது.

மற்றொரு காலிறுதியில் போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா 7-6, 4-6, 6-2 என்ற செட் கணக்கில் சீனாவின் லீ நாவை தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றைய காலிறுதிப் போட்டியில் 20ஆம் நிலை வீராங்கனை கிர்ஸ்டன் பிலிப் ஹென்ஸ் (பெல்ஜியம்) 4-6, 6-3, 6-4 என்ற கணக்கில் குவிட் டோவாவை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறினார்.

அடுத்த காலிறுதி ஆட்டத்தில் 15ஆம் நிலை வீராங்கனை மரியான் [illegible] (பிரான்ஸ்) 6-4, 7-5 என்ற கணக்கில் [illegible] (அமெரிக்கா) தோற்கடித்தார்.



விம்பிள்டன் டெனிஸ் காலிறுதியில் வெற்றிபெற்ற போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா (வலது) சீனாவின் லீ நாவுக்கு கைலாகு கொடுக்கும்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம் யாழ்.ஜொனியன்ஸ் முன்னிலை

ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்தில் யாழ். நகரில் சிறந்த கழக அணி தெரிவில் இவ் ஆண்டில் யாழ். ஜொனியன்ஸ் அணி 98.6 புள்ளிகளுடன் மீண்டும் முன்னிலையில் உள்ளது.

மேற்படி வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நான்காவது ஆண்டாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணி தெரிவு நிகழ்வில் 30.06.2013 வரை நடைபெற்ற 93 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ் ஜொனியன்ஸ் மீண்டும் முன்னிலையில் உள்ளது.

மேற் கூறப்பட்ட போட்டிகள் முடிபுற்ற நிலையில் கழக அணிகளின் நிலைகளும் பெற்ற புள்ளிகளும் பங்கு பற்றிய போட்டிகளும் வெற்றி பெற்ற போட்டிகளும் பின்வருமாறு,

யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 98.6 புள்ளிகளுடன் முதலாமிடத்தினையும். யாழ்.பல்கலைக்கழகம் 77.9 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தினையும். ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 67.8 புள்ளிகளுடன் 3ஆம் இடத்தினையும். கே.சீ.சீ.சீ. விளையாட்டுக்கழகம் 56.2 புள்ளிகளுடன் 4ஆம் இடத்தினையும். மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 49:6 புள்ளிகளுடன் 5ஆம் இடத்தினையும்,


ஓல்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் 48.5 புள்ளிகளுடன் 6ஆம் இடத்தினையும். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் சொக்ஸ் 47.3 புள்ளிகளுடன் 7ஆம் இடத்தினையும் கிறாப் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் 40.4 புள்ளிகளுடன் 8ஆம் இடத்தினையும். ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் 33.4 புள்ளிகளுடன் 9ஆம் இடத்தினையும். யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 30.7 புள்ளிகளுடன் 10ஆம் இடத்தினையும்,

திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 25.6 புள்ளிகளுடன் 11ஆம் இடத்தையும் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம் 24.7 புள்ளிகளுடன் 12ஆம் இடத்தினையும் திருநெல்வேலி YMHA விளையாட்டுக்கழகம் 22.1 புள்ளிகளுடன் 13ஆம் இடத்தினையும். பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழும் 21.5 புள்ளிகளுடன் 14 ஆம் இடத்தினையும். அரியாலை சென்ரல் விளையாட்டுக்கழகம் 21.1 புள்ளிகளுடன் 15ஆம் இடத்தையும், ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 20.0 புள்ளிகளுடன் 16ஆம் இடத்தினையும்.




நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் 18.1 புள்ளிகளுடன் 17ஆம் இடத்தினையும் யங் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 11.1 புள்ளிகளுடன் 18ஆம் இடத்தினையும். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் புழூஸ் 9.7 புள்ளிகளுடன் 19ஆம் இடத்தினையும். யூனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 8.5 புள்ளிகளுடன் 20 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளன.

# நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை அணி வெற்றி



யாழ் SOS சிறுவர் கிராமத்தினரால் சர்வதேச SOS தினத்தை முன்னிட்டு யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்ட அணிக்கு 9 பேர் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றம் கொண்ட மென்பந்து சுற்றுப்போட்டியில் யா/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இச்சுற்றுப் போட்டியில் யா.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், யா/ நல்லூர் தெற்கு சிறிவிக்னேஸ்வரா வித்தியாலயம், யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆகிய பாடசாலைகளின் 17 வயதுக்குட்பட்ட மாணவர் அணிகளோடு யாழ் SOS சிறுவர் கிராம அணியும் பங்குபற்றியது.

# கரப்பந்தாட்ட போட்டி



மக்களின் ஒருமைப்பாட்டையும் நல்லுறவையும் வலுப்படுத்தும் நோக்கில் நெடுந்தீவு மக்களால் நடத்தப்படுகின்ற பாரம்பரிய விளையாட்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை 10மணியளவில நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன், பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவு கிளை தலைவர் எ.அருந்தவசீலன், கழகங்களின் உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் 6 பேர் பங்கு கொள்ளும் கரப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் நெடுந்தீவினை பிரதிநிதித்துவப்படுத்தும் 04 கழகங்களும் பங்குபற்றி இறுதிபோட்டியில் சென்ஜோண்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டது. இதில்சென்ஜோண்ஸ்விளையாட்டுகழகம் 2:0 என்ற ரீதியில் வெற்றி பெற்றது.

# புலிக்கொடியுடன் ஓடியவருக்கு பிடியாணை

ஐக்கிய இராஜியத்தில் கார்டிஃப் நகர மைதானத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போது புலிக்கொடியுடன் ஓடியவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் கடந்த யூன் மாதம் 20 ஆம் திகதி கார்டிஃப் நகர மைதானத்தில் நடந்தபோது புலிக்கொடியுடன் ஓடியவரையே கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்ட திறந்த பிடியாணையை நேற்று புதன்கிழமை பிறப்பித்துள்ளார்.

புலிக்கொடியுடன் மைதானத்திற்குள் ஓடி குழப்பம் விளைவித்த லோகேஸ்வரன் மணிமாறன் என்பவருக்கே இவ்வாறு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.(செ-11)

# பிரித்தானியா...

நிலையில், குறிப்பாக பெண்கள் தனியாகவோ அல்லது சிறிய குழுவாகவோ பயணம் செய்யும் போது கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரித்தானியர்களுக்கு மட்டும் ஆபத்து உள்ளதாகக் கூறுவதற்கு ஆதாரங்கள் இல்லாத போதிலும், குறிப்பிட்ட ஆயுதக் குழுக்கள் சுற்றுலாப் பிரதேசங்களில் அதிகம் நடமாடுவதாக இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அத்துடன்இ 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பிரித்தானியர் ஒருவர் இத்தகைய குழுவொன்றினால் கொல்லப்பட்டிருந்ததையும் இவ்வறிக்கை நினைவூட்டியுள்ளது.

இத்தகையதொரு பயண எச்சரிக்கையை கடந்த வாரம் அமெரிக்காவும் வெளியிட்டிருந்தமையும், இதனையடுத்து இது தொடர்பில் அமெரிக்காவிடம் இலங்கை வெளிவிவகார அமைச்சு விளக்கம் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

# பாரம்பரிய விளையாட்டு விழா ; சென் ஜோன்ஸ் வி.க வெற்றி



மக்களின் ஒருமைப்பாட்டையும் நல்லுறவையும் வலுப்படுத்தும் நோக்கில் நெடுந்தீவு மக்களால் நடத்தப்படுகின்ற பாரம்பரிய விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் காலை 10மணியளவில் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் கோலாகலமாக நடந்தது. முதல் நாள் நிகழ்வாக 11பேர் பங்கு கொள்ளும் 10 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் நெடுந்தீவினை பிரதிநிதித்துவப்படுத்தும் 06 கழகங்களும், நெடுந்தீவில் பணியாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் அணியும் பங்குபற்றி இருந்தன. இவ் இறுதிபோட்டியில் சென்ஜோண்ஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து சென். அன்ரனீஸ் யூத் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. இதில் சென்ஜேண்ஸ் விளையாட்டுக்கழகம் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வெற்றி கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் ஆயு...

மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட உத்தியோகத்தர்கள் மாநாடு நேற்று மட்டக்களப்பு ஆரையம்பதியிலுள்ள நந்தகோபன் மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் பசீர் ஷேகுதாவூத் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சகல அரசியல் கட்சிகளும் சகல அரசியல் வாதிகளும் இந்த 13 எனும் ஆயுதத்தை தூக்கி கையிலெடுத்து நிற்கின்றனர். ஆனால் இந்த 13 எனும் ஆயுதத்தினால் ஒரு காலமும் வெட்ட முடியாது. தேர்தல்கள் வந்தால் இந்த 13 ஐ இன்னும் கூடுதலாக தூக்கிப்பிடித்துக் கொண்டு நிற்பார்கள்.

பெருந்தேசியவாதத்தினர் இந்த 13யை முற்றாக ஒழிக்க வேண்டும் எனவும் சிறு தேசிய வாதத்தினர் இதை பாதுகாக்க வேண்டுமெனவும் நிற்கின்றனர். 13 என்பது இன்று நமது நாட்டில் பெரும் சிக்கலாக மாறியுள்ளது.

இனத்துவ அரசியலுக்குள் மூழ்கிக்கிடப்பதால்தான் தமிழர்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் சிங்களவர், கிறிஸ்தவர் என்ற பிரிவினை வாதம் உள்ளது. பிரிவினை வாதத்திற்கு ஒருபோதும் வழி வகுத்து விடக்ககூடாது.

இன, மத, மொழி பேதமின்றி நாம் அனைவரும் மக்கள் என நினைத்து கடமை யாற்ற வேண்டும் என அமைச்சர் பசீர் ஷேகு தாவூத் மேலும் தெரிவித்தார். (செ-11)

## வடக்கு அதி...

பவதற்கு முன்னர், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை திருத்து மாறு நாங்கள் கூறும் போது, தமிழ் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதை நாம் எதிர்ப்பதாக கூறுகின்றனர்.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள இவர்களில் எவராக இருந்தாலும் இனத்தை காட்டி அதிகாரத்தை காட்ட முடியாத விதமான அதிகாரங்களை கொடுத்தால் அதனை எதிர்க்க போவதில்லை.

மேல் மாகாணத்திற்கு கொடுக்கும் அதிகாரங்களை வடக்கு மாகாணத்திற்கும் கொடுங்கள். மேல் மாகாணத்தில் பயன்படுத்தப்படாத அதிகாரத்தை வடக்கு மாகாணத்திற்கு கொடுக்க வேண்டாம் என்றும் வீரவன்ச தெரிவித்துள்ளார். (செ-11)

## அதிகாரங்கள்...

இன்று புதுடெல்லியில் இந்திய மத்திய அரசாங்கப் பிரதிநிதிகளுடன் பசில் ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் இராணுவ முகாம்களை அகற்றுதல் மற்றும் பொலிஸாரை முதலமைச்சர் வழி நடத்தக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

13 அமைச்சர்கள் மட்டுமே 13-ம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளித்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை பசில் ராஜபக்ஷ சந்திக்கவுள்ளார். (செ-11)

## '13' ஐ பாதுகாக்க...

அதில்கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதா இல்லையாவென முதலில் சர்வதேசத்திடம் தெரிவிக்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேசத்திற்கு 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக அரசாங்கமே உறுதியளித்தது. மாறாக அதனை நடைமுறைப்படுத்துவோமென நாட்டு மக்கள் உறுதியளிக்கவில்லை.

அவ்வாறில்லையெனில் அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த மாட்டோமென சர்வதேசத்திடம் தெரிவிக்க வேண்டும்.

நமது நாடு ஒரு சிறிய நாடு. சீனாவின் கதைகளை கேட்டு இந்தியா மற்றும் சர்வதேசத்தினை பகைக்காது அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் செயற்படுவதே சிறந்தது. தேவையில்லாது சர்வதேசத்துடன் முரண்படாமல் அரசாங்கம் உறுதியளித்த விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் எமக்கு சர்வதேசத்தின் எந்தவிதமான ஒத்துழைப்புக்களும் கிடைக்காது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, எரான் விக்கிரமரட்ண, கொழும்பு மாநகர சபை மேயர் முஸம்மில், மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண, சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய, ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதிமேயர் அசாத் சாலி, புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத் மன மேந்திரா மற்றும் பலர் கலந்து கொண்டனர். (செ-11)


## கூட்டமைப்பு...

இலக்குகளை அடையும் ஒரு விசேட கலந்துரையாடலாகவே இன்றைய கூட்டம் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்கு.
தரமான ஓடுகள் (டபிள் நந்தி மார்க், நூறாணி மார்க், பெப்ஸி மார்க், ஸ்டார் மார்க்) போன்ற ஓடுகள் யாழ், வன்னி ஆகிய இடங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்
தொடர்புகளுக்கு - 077 3818799
பிரணவன் என்ரப்பிறைசஸ்
இல- ३६५, பருத்தித்துறை வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.

மெய்தான் - உண்மைதான்
வெறும் 625000/– ரூபாயை
(ஆறு இலட்சத்து இருபத்தையாயிரம் மட்டும்)
செலுத்தி ஐரோப்பிய நாடொன்றில்
படிக்க உழைக்க பறக்கலாம்.
(நிபந்தனைகளுடன்)
படித்துக்கொண்டே மாதாந்தம் இலட்சம் ரூபாய் சம்பாதிக்கலாம்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-3868)

# மரண அறிவித்தல்



## சின்னையா தவரெட்ணம் (JP)

(முன்னாள் தலைவர் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம், யாழ்மாவட்ட கூட்டுறவு சபை பணிப்பாளர் சபை உறுப்பினர், வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவர்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தவரெட்ணம் 03.07.2013 அன்று காலமானார். இவர் பிலோமினா (றோஸ்) வின் அன்புக் கணவரும், Dr. திருமாறன், றதிமதி, Dr. மதிமாறன் (I.O.M) அவர்களின் பாசமிகு தந்தையும் Dr. அனோமா, கெனியூட், Dr. மகிழ்நங்கை (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவர்.

இவரது நல்லடக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

83/11 பீச் றோட், குருநகர், யாழ்ப்பாணம்.

(C-3861)

தகவல் : குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.